بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 8

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

5 ஜமாதுஸ்ஸானி 1439 ஹிஜ்ரி கமரி 22 தப்லீக் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

22 பிப்ரவரி 2018


**அல்லாஹ்வின் கட்டளை**

كُلُوْا وَاشْرَبُوْا مِنْ رِّزْقِ اللّٰهِ وَلَا تَعْثَوْا فِي الْاَرْضِ مُفْسِدِيْنَ

அல்லாஹ் வழங்கிய உணவிலிருந்து உண்ணுங்கள்; பருகுங்கள்; குழப்பம் செய்து பூமியில் கேடு விளைவிக்காதீர்கள்.

(அதிகாரம் அல் பக்கரா : 61)

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நான் துணிச்சலுடன் கூறுகின்றேன். அதாவது, இறைவனின் அருளாலும் கருணையாலும் எவரை பின்பற்றுவதை எல்லா முஸ்லிம்கள் மீதும் இறைவன் கடமையாக்கியுள்ளானோ அந்த காலத்தின் இமாம் நானே ஆவேன். நான் ஆன்மீகமான முறையில் சிலுவையை முறிப்பதற்காகவும் கருத்து வேறுபாடுகளை அகற்றுவதற்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

இந்த காலத்தில் காலத்தின் இமாம் ஆக யார் இருக்கின்றார்? அவரை பின்பற்றுவது எல்லா முஸ்லிம்கள் மீதும் இறையச்சமுள்ளவர்கள் மீதும் இறைநேசர்கள் மீதும் இல்ஹாமை பெறுபவர்கள் மீதும் இறைவன் தரப்பிலிருந்து கடமையாக்கப்பட்டிருக்கின்றது. எனவே, இந்த நேரத்தில் நான் துணிச்சலுடன் இதை கூறுகின்றேன். அதாவது, இறைவனின் அருளாலும் கருணையாலும் இந்த காலத்தின் இமாம் நானே ஆவேன். என்னிடத்தில் இறைவன் அந்த எல்லா அடையாளங்களையும் எல்லா நிபந்தனைகளையும் ஒன்று சேர்த்துள்ளான். மேலும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் என்னை அனுப்பியுள்ளான். அதில் 15 வருடங்களும் கடந்து விட்டன. இஸ்லாத்தின் கொள்கைகள் கருத்து வேறுபாடுகளால் நிறைந்து விட்ட அத்தகைய நேரத்தில் நான் தோன்றியுள்ளேன். எந்த ஒரு கொள்கையிலும் கருத்து வேறுபாடு இல்லாமல் இல்லை. அவ்வாறே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறங்குவது தொடர்பாக மிகவும் தவறான எண்ணங்கள் பரவி விட்டன. இந்த கொள்கையிலும் கூட கருத்து வேறுபாட்டின் நிலை எவ்வாறிருக்கின்றது என்றால், ஒருவர் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்பதை ஏற்றுக் கொள்கின்றார். இன்னொருவர் அவர்கள் மரணித்து விட்டார்கள் என்று கூறுகின்றார். ஒருவர் அவர்கள் பௌதீகமாக பூத உடலடன் இறங்கி வருவதை ஏற்றுக் கொள்கின்றார். இன்னொருவர் அவரது நிழலான வருகையைப் பற்றிய கொள்கையுடையவராக இருக்கின்றார். ஒருவர் அவர்களை டமாஸ்கஸில் இறக்குகின்றார். இன்னொருவர் அவர்களை மக்காவிலும் இன்னொரு நபர் அவர்களை பைத்துல் முகத்தஸிலும் இன்னொருவர் அவர்களை இஸ்லாமிய படைகளுக்கு மத்தியிலும் இறக்குகின்றார். இன்னொரு நபர் அவர்கள் இந்தியாவில் இறங்குவார் என்று கருதுகின்றார். எனவே, இந்த அனைத்து பல்வேறு கருத்துக்களும் பல்வேறு கூற்றுக்களும் தீர்ப்பளிக்கின்ற ஒரு ஹகம் அதாவது நெறிநீதி தீர்ப்பவரை வேண்டுகின்றது. அந்த நெறிநீதி தீர்ப்பவர் நானே ஆவேன். நான் ஆன்மீகமான முறையில் சிலுவையை முறிப்பதற்-காகவும் கருத்து வேறுபாடுகளை அகற்றுவதற்காகவும் அனுப்பப்பட்டுள்ளேன்.

*(ஸரூரத்துல் இமாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 13 பக்கம் 495)*

## 123 –வது காதியான் ஆண்டு மாநாடு 2017 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இப்போது 126 –வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 123 –வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெறுபவர்களிடம் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்.**

✦ 44 நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர் ✦ 20,048 பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர் ✦ ஹுஸூர் அவர்கள் மாநாட்டிற்காக நிகழ்த்திய நிறைவுரையின்போது இலண்டனில் 5,300 பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் ✦ தஹஜ்ஜுது தொழுகை ✦ திருக்குர்ஆன் தர்ஸ் மற்றும் இறைவனை நினைவு கூர்கின்ற சுற்றுச்சூழல் ✦ கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் பொருட்செறிவு நிறைந்துள்ள சொற்பொழிவுகள் ✦ மார்க்கத் தோற்றுனர்களின் மாநாடு ✦ கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் அறிமுக சொற்பொழிவுகள் ✦ நமது நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகளில் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு ✦ ஜமாஅத் சகோதர்களுக்கு அவர்களது அறிவை அதிகப்படுத்தும் வகையில் தர்பிய்யத் விஷயங்கள் அடங்கிய குறும்படம் காட்டப்பட்டது ✦ பல்வேறு அறிவு சார்ந்த தகவல்களை தரக்கூடிய வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது ✦ 32 திருமணங்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது ✦ அச்சகம் மற்றும் மின்னனு ஊடகத்தில் மாநாடு பற்றிய கவரேஜ் ✦ அமைதி நிறைந்த நல்ல சீதோஷண நிலையில் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிறைவை எட்டியது ✦ 20 முதல் 22 டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான اِسْمَعُوْا صَوْتَ السَّمَآءِ جَآءَ الْمَسِيْحُ جَآءَ الْمَسِيْحُ *MTA* இன்டர்நேஷனில் காதியானிலுள்ள ஸ்டூடியோவிலிருந்து நேரலை ஆக ஒளிபரப்பப்பட்டது ✦ 3 முதல் 5 ஜனவரி வரை *"The Messiah of the Age"* என்ற தலைப்பில் ஆப்பிரிக்க மக்களுக்காக நேரலை நிகழ்ச்சி *MTA* -வில் ஒளிபரப்பப்பட்டது

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

❖ இந்த அமர்வின் இரண்டாவது சொற்பொழிவை மதிப்பிற்குரிய ஷிராஸ் அஹ்மது சாஹிப் (தென் இந்தியாவிற்கான கூடுதல் நாஸிர் அ∴லா மற்றும் நாஸிர் த∴லீம் காதியான்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர்களது சொற்பொழிவின் தலைப்பு "ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் ஈமானுக்கு எழுச்சியூட்டக்கூடிய அலுவல்களும் ஜமாஅத் சகோதரர்களின் பொறுப்புகளும்" என்பதாகும். அவர்கள் தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்: நமது வாழ்வின் நோக்கம் سمعنا و اطعنا அதாவது, நாம் கேட்டோம்; கட்டுப்பட்டு நடந்தோம் என்பதாகும். அதனை நாம் மீண்டும் மீண்டும்

*(தொடர்ச்சி 8-வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இரண்டு நாள்களுக்கு முன்பு இயக்கத்தின் நீண்ட கால சேவகரான கண்ணியத்திற்குரிய சாஹிப் ஸாதா குர்ஷித் அஹ்மது சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ அவர்களுக்கு அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் ஆன்மீகமாகவும் பௌதீகமாகவும் இரு வகையிலும் உறவு முறையை வழங்கியிருந்தான். இந்த உலகிற்கு வந்தவர் எவராக இருப்பினும் ஒருநாள் இவ்வுலகை விட்டுச் சென்றாக வேண்டும் என்பது அல்லாஹ்வின் சட்டம் ஆகும். ஒவ்வொரு பொருளுக்கும் அழிவு உண்டு. எக்காலத்திலும் நிலைத்திருப்பது அல்லாஹ் மட்டும்தான். ஆனால், அல்லாஹ்வினால் தரப்பட்ட இந்த உலகியல் வாழ்வை பொருள் பொதிந்ததாக ஆக்கியவர் நற்பேறு பெற்றவர் ஆவார். அவர்கள் அல்லாஹ் உடைய திருப்தியைப் பெற முயற்சி செய்கின்றனர். அவர்கள் இதனை புரிகிறார்கள். எந்த ஒரு 'வலி' அல்லது நல்ல மனிதராக இருக்கட்டும். அவர் ஒரு நபியுடன் பௌதீக உறவு முறையில் இருப்பதனால் மட்டுமே அது அவரை அவரது வாழ்வில் நோக்கத்தில் வெற்றி பெற்றவராக ஆக்கி விடாது அல்லது அவரை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவராகஆக்கி விடவும் செய்யாது. மாறாக மனிதன் தானே தனது சொந்த செயல்களின் மூலமே அல்லாஹ்வின் திருப்தியைப் பெற முடியும்.**

---

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கொள்ளுப் பேரரான மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதா மிர்ஸா குர்ஷித் அஹ்மது சாஹிப் (நாஸிர் அஃலா சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா பாகிஸ்தான்) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூம் அவர்களின் மார்க்கத் தொண்டுகள் மற்றும் புகழுக்குரிய நற்பண்புகள் பற்றி ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும் அன்னாருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.**

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**19 ஜனவரி 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **சுல்ஹ்** மாதம் **19 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

இரண்டு நாள்களுக்கு முன்பு இயக்கத்தின் நீண்ட கால சேவகரான கண்ணியத்திற்குரிய சாஹிப் ஸாதா குர்ஷீது அஹ்மது சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ அவர்களுக்கு அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் ஆன்மீகமாகவும் பௌதீக –மாகவும் இரு வகையிலும் உறவு முறையை வழங்கியிருந்தான்.

இந்த உலகிற்கு வந்தவர் எவராக இருப்பினும் ஒருநாள் இவ்வுலகை விட்டுச் சென்றாக வேண்டும் என்பது அல்லாஹ்வின் சட்டம் ஆகும். ஒவ்வொரு பொருளுக்கும் அழிவு உண்டு. எக்காலத்திலும் நிலைத்திருப்பது அல்லாஹ் மட்டும்தான். ஆனால், அல்லாஹ்வினால் தரப்பட்ட இந்த உலகியல் வாழ்வை பொருள் பொதிந்ததாக ஆக்கியவர் நற்பேறு பெற்றவர் ஆவார். அவர்கள் அல்லாஹ் உடைய திருப்தியைப் பெற முயற்சி செய்கின்றனர். அவர்கள் இதனை புரிகிறார்கள். எந்த ஒரு 'வலி' அல்லது நல்ல மனிதராக இருக்கட்டும். அவர் ஒரு நபியுடன் பௌதீக உறவு முறையில் இருப்பதனால் மட்டுமே அது அவரை அவரது வாழ்வில் நோக்கத்தில் வெற்றி பெற்றவராக ஆக்கி விடாது அல்லது அவரை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவராக ஆக்கி விடவும் செய்யாது. மாறாக மனிதனின் சொந்த செயல்களே அவனை அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக்கூடியவனாக ஆக்குகின்றன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூட ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஃபாத்திமா எனது மகளாக இருப்பதினால் மட்டுமே நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்று விட முடியாது. அவனது திருப்தியைப் பெறுவதற்கு உங்கள் வாழ்வை அவனது கட்டளைக்கு ஏற்ப அமைப்பதற்கு முயற்சி செய்யுங்கள். அல்லாஹ்வுக்கு பயப்பட வேண்டும். அல்லாஹ் உங்கள் முயற்சிகளை ஏற்றுக் கொள்வானாக. தனது அருளால் முடிவை நல்லதாக்குவானாக. அப்போதுதான் அதனை பெற முடியும். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 343)

நான் சுயமே இதனை அறிவேன். அன்னாருடன் எனக்கு நல்ல தொடர்பும் இருந்தது. ஹஸ்ரத் மிர்ஸா குர்ஷீது அஹ்மது சாஹிபுடன் எனக்கு தொடர்பு இருந்தது. அன்னாரை மிக நன்றாக காணும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். அதுபோன்று மக்களும் அதிகமாக கடிதம் எழுதியுள்ளனர். அதிகமான கடிதங்கள் வந்துள்ளன. பணிவுடன் தமது அர்ப்பணிப்பைப் பேணி நடந்து தமது பணிகளை நிறைவுடன் செய்தார்கள். ஒருபோதும் குடும்பப் பெருமை காட்டியதில்லை. கடந்த வருடம் இங்கு மாநாட்டுக்கு வந்திருந்தார்கள். நல்ல முடிவு கிடைக்க வேண்டும் என்பது குறித்து என்னிடம் கூறினார்கள்.

மேலும், ஒரு மனிதரின் உதாரணத்தையும் கூறினார்கள். அதாவது ஒரு பெரிய மனிதர் ஒருவர் மரணிக்கின்ற வேளையில் 'இப்போதும் இல்லை; இப்போதும் இல்லை' என்று கூறிய நிலையில் மரணித்து விட்டார். அவரது மாணவர் அவர் மரணிக்கும்போது ஏன் அவ்வாறு கூறினார் என்பதை அறிந்து கொள்ள அல்லாஹ்விடம் துஆ செய்தார். அப்போது அவரது கனவில் அதே பெரியவர் தென்பட்டார். மரணமடையும்போது 'இப்போதும் இல்லை; இப்போதும் இல்லை' என்று கூறினீர்களே ஏன்? என்று இவர் கேட்டார். அதற்கு அவர், எனது கடைசி நேரத்தில் ஷய்த்தான் என்னை நழுவ வைக்க முயன்றான். நீ எனது கையில் இருந்து தப்பி விட்டீர். அதிகமாக நற்செயல்களைச் செய்து விட்டீர் என்று கூறினான். அவனிடம் நான் கூறினேன். எனது உடலில் மூச்சு இருக்கும் வரை நான் என்ன செய்வேன் என்று தெரியாது. நான் மரணிக்கும் வேளையில் ஷய்த்தானிடம் 'இப்போது இல்லை' என்று கூறினேன். அதே நிலையில் எனது உயிர் எடுக்கப்பட்டது. நான் இப்போது சுவர்க்கத்தில் இருக்கின்றேன் என்றார். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 306) முடிவைப் பற்றி கவலைப்படுபவர்களின் வழிமுறை இதுவாக இருந்தது. இந்த சம்பவத்தை அன்னார் என்னிடம் கூறினார்கள். அந்த கவலை அன்னாருக்கும் இருந்தது. அன்னார் அர்ப்பணிப்பின் ஆன்மாவைப் புரிந்திருந்தார்கள். புரிந்தவாறு பணி செய்த பெரியவராக இருந்தார்கள். இங்குள்ள நேரப்படி முன்தினம் இரவு சுமார் 10.00 மணிக்கு வஃபாத் ஆகி உள்ளார்கள். அவருக்கு 85 வயது ஆகி இருந்தது.

இவர், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கொள்ளுப் பேரர் ஆவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மூத்த மகனாகிய ஹஸ்ரத் மிர்ஸா சுல்தான் அஹ்மது சாஹிபின் மகனாகிய ஹஸ்ரத் மிர்ஸா அஸீஸ் அஹ்மத் சாஹிப் உடைய மகன் ஆவார்கள். ஹஸ்ரத் மிர்ஸா அஸீஸ் அஹ்மத் சாஹிப் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பேரன் ஆவார்கள். அவர் தனது தந்தையாருக்கு முன் பைஅத் செய்திருந்தார்கள்.

12 செப்டம்பர் 1932 –ல் லாஹூரில் பிறந்தார்கள். 21 ஏப்ரல் 1945 –ல் அன்னார் பன்னிரெண்டரை வயதில் வாழ்வை அர்ப்பணிப் –பதற்கான படிவத்தை நிரப்பினார்கள். அப்போது அன்னார் ஒன்பதாம் வகுப்புதான் படித்து வந்தார்கள். காதியான் உயர்நிலைப் பள்ளியில் மெட்ரிக் படித்தார்கள். T.I. கல்லூரியில் படிப்பைத் தொடர்ந்தார்கள். பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய வழிகாட்டலுக்கு இணங்க லாஹூரில் உள்ள அரசு கல்லூரியில் M.A ஆங்கிலம் பயின்றார்கள். 10 செப்டம்பர் 1956 –ல் வாழ்வை அர்ப்பணித்தவராக ரப்வாவில் T.I. கல்லூரியில் இணைந்தார்கள். 17 வருடம் ஆங்கிலேய ஆசிரியராக பணியாற்றினார்கள். மிகவும் உழைத்து லெக்சர் தயார் செய்தார்கள். நானும் அன்னாரிடம் படித்துள்ளேன். அவரது நிறைய மாணவர்களும் கூட இதனை எழுதியுள்ளனர். மிகவும் உழைத்து தயார் செய்து வந்து மிகவும் முயன்று அதனை சொல்லித் தரவும் செய்வார்கள். அவர்களுக்கு தமது பாடத்தில் நல்ல தேர்ச்சி இருந்தது. எனவேதான் மாணவர்களின் இசைவைப் பெற்றவராகவும் விளங்கினார்கள். மாணவர்கள் மிகவும் நேசித்தனர். 1964 –ல் English

Phonetic Course –க்காக British Coursil –ன் உதவித் தொகையுடன் ஒரு வருடம் இங்கிலாந்து வந்து University –யில் பயின்றார்கள்.

அன்னாருடைய ஜமாஅத் பணிகள் சிலவற்றை எடுத்து வைக்கிறேன். 1974 –ல் மிகவும் இக்கட்டான நிலை ஏற்பட்டபோது மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதா மிர்ஸா குர்ஷீது அஹ்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு உதவியாக அன்னாருக்கு பணி செய்வதற்காக ஓரிரு மாதங்கள் கிலாஃபத் கட்டடத்திலேயே தங்கி இருந்தார்கள். அதே போன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் ஒப்புதலுடன் ரப்வாவில் ஆதரவற்ற அனாதைகளின் கல்வி மற்றும் பயிற்சி மற்றும் கண்காணிப்பிற்காக 1962 –ஆம் ஆண்டின் மத்தியில் 'தாருல் இகாமத்தின் நுஸ்ரத்' என்ற ஒரு விடுதி உருவாக்கப்பட்டது. பின்னர் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அதற்கு 'மத்தே இம்தாதே துல்பா' என பெயர் வைத்தார்கள். ஜூலை 1978 முதல் 1983 ஜூலை வரை அந்த துறையின் கண்காணிப்பாளராக இருந்தார்கள். அதன் பிறகு ஜமாஅத்தின் கல்வித் துறையின் பொறுப்பில் அப்பணி ஒப்படைக்கப் –பட்டது. 30 ஏப்ரல் 1973 –ல் அன்னார் தர்வேஷ் –களுக்காக தொண்டு செய்யும் துறையின் நாஸிர் ஆக ஆக்கப்பட்டார்கள். மே ஒன்று 1976 முதல் 1988 வரை கூடுதல் நாஸிர் அஃலாவாக இருந்தார்கள். பல்வேறு கமிட்டிகளின் உறுப்பினராகவும் தொண்டாற்றும் வாய்ப்பு பெற்றிருந்தார்கள். அக்டோபர் 1988 முதல் செப்டம்பர் 1991 வரை நாஸிர் உமூரே ஆமாவாக பணியாற்றும் வாய்ப்பு பெற்றார்கள். ஆகஸ்ட் 1992 முதல் மே 2003 வரை வெளி விவகாரத்துறையின் நாஸிராக இருந்தார்கள். அதன் பிறகு என்னுடைய கிலாஃபத்தில் இவரை நாஸிர் அஃலாவாக நியமித்தேன். ரப்வாவின் உள்ளூர் அமீர் ஆகவும் நியமித்தேன். மிக நல்ல முறையில் பணியாற்றினார். மார்க்கத் தீர்ப்பு வழங்கும் கமிட்டியின் உறுப்பினராக 12–13 வருடங்கள் இருந்தார்கள். கஸா போர்டிலும் 12–13 ஆண்டுகள் உறுப்பினராக இருந்தார்கள். 1973 –ல் அன்னாருக்கு ஹஜ் செய்யும் வாய்ப்பையும் அல்லாஹ் வழங்கினான். அன்னாரின் திருமணத்தை 26 டிசம்பர் 1955 –ல் இரண்டாவது கலீஃபதுல் மஸீஹ் அவர்கள் நடத்தி வைத்தார்கள். 5 அல்லது 6 திருமணங்கள் அப்போது நடந்தன.

இதில் இவர்கள் பற்றி கூறும்போது இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறினார்கள்: இந்த பையனும் நமது குடும்பத்தில் இருந்து வக்ஃப் செய்தவர் ஆவார். மிர்ஸா அஸீஸ் அஹ்மத் சாஹிபிற்கு தமது இந்த மகனுக்கு நல்ல கல்வியை வழங்கும் வாய்ப்பை இறைவன் தந்திருந்தான். இந்த பையன் இப்போது M.A படித்துக் கொண்டிருக்கிறார். இன்னும் தேர்வாகவில்லை. அதாவது படிப்பு முடியவில்லை. ஆனால் ஆங்கிலப் பாடத்தில் M.A பரீட்சை எழுத உள்ளார். இவர் நல்ல ஆங்கிலத்தில் திறமை பெற்றவராகத் தெரிகிறது. இவரை கல்லூரியில் Professor ஆக சேர்க்க வேண்டும் என்பது எனது எண்ணமாகும். பிறகு மேலும், இவர் மொழி பெயர்ப்பு பணியிலும் மற்றவர்களுடன் சேர்த்து பயன்படுவார் என்று கூறினார்கள். (குத்பாத்தே மஹ்முது தொகுதி 3 பக்கம் 622-625. ஜுமுஆ குத்பா 26 டிசம்பர் 1955)

அல்லாஹ் அன்னாருக்கு 6 குழந்தைகளை வழங்கியிருந்தான். இவருடைய 4 பையன்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்கள். அதில் இருவர் டாக்டர்கள். ஒருவர் கல்வித் துறையில் இருக்கிறார். நாயிப் நாஸிர் ஆக இருக்கிறார். Phd. படித்துள் –ளார்கள். இன்னொருவர் முஷீரே காணூணி துறையில் சட்ட ஆலோசனை வழங்கும் துறையில் உள்ளார். அன்னாருக்கு கிளை அமைப்புகளிலும் நல்ல பணி செய்யும் வாய்ப்பு கிடைத்துள்ளது. 2000 முதல் 2003 வரை பாகிஸ்தான் அன்ஸாருல்லாஹ்வின் சத்ர் ஆக இருந்தார்கள்.

இவர்களது மகன் டாக்டர் சுல்தான் அஹ்மத் எழுதுகிறார்: இவர்களுக்கு இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் மீது மிகவும் அன்பு இருந்தது. சில வருடங்களுக்கு முன்னர் அவர்களுக்கு நெஞ்சு வலி ஆரம்பமானது. பிறகு நீண்ட காலமாக நெஞ்சு வலி இருந்தது. சிறிது சிறிதாக அதிகரித்து வந்தது. அவர்கள் ஒக்காடா என்ற இடத்திற்கு பயணம் மேற்கொண்டிருதார்கள். அவரது மகன் அவரை அழைத்துச் செல்வதற்காக வந்தார். அவர்களுடன் டாக்டர் நூரி அவர்களும் இருந்தார்கள். வரும் வழியிலேயே அவர்களுடன் சந்திப்பு ஏற்பட்டு விட்டது. அப்போது மிர்ஸா குர்ஷித் அஹ்மத் சாஹிப் அவர்கள், நான் துஆ செய்து வந்தேன். வழி முழுவதும் துஆ செய்து வந்ததேன். நான் ரப்வா சென்று சேர வேண்டும். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களால் உருவாக்கப்பட்டு அவர்கள் வாழ்ந்து அடக்கப்பட்டிருக்கும் அந்த பூமியில் அவர்களின் காலடியிலிலேயேதான் மரணிக்க வேண்டும் என்று கூறினார்கள். இதுவே துஆவாக இருந்தது. இதுவே இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹுடன் இருந்து வந்த அன்னாரது அன்பின் கதையாகும்.

பிறகு இவர்களது மகன் எழுதிகிறார்: நோயுற்ற நிலையில் ஒரு நாள் இரவு நிம்மதி இழந்தவர்களாக எழுந்து அமர்ந்தவாறு கூறினார்கள். நான் ஒரு நீண்ட கனவு கண்டேன். ஒரு சிலர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் மீது ஆட்சேபனை செய்கிறார்கள். மக்கள் அதற்கு பதில் சொல்லாமல் இருக்கிறார்கள். இந்த கனவை பார்த்து மிகவும் கவலை கொண்டவராக இருந்தார்கள். ஏன் இவர்கள் பதில் தராமல் இருக்கிறார்கள்? என்ற இந்த கவலையில் அவர்கள் தூங்கவும் இல்லை.

அன்னார் கூறி வந்தார்கள்: ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் மீது எதிரிகளின் காழ்ப்புணர்ச்சி மிக அதிகமாகும். இன்னும் சொல்வதாயின், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது கொண்ட வெறுப்பை விட அதிகமாகும். அது மிகவும் உண்மையும் ஆகும். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஜமாஅத் அமைப்பை உருவாக்கி இருக்கா விட்டால் ஜமாஅத் அழிந்து இருக்கும் என்பது எதிரிகளின் எண்ணமாகும். இது அல்லாஹ்வின் ஜமாஅத் ஆகும். இது தொடர்ந்து செல்ல வேண்டியது இருந்தது. எனவே, இவை நடக்க வேண்டிய –திருந்தது. ஆனால் எதிரிகளில் பெரும்பாலார் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை ஏன் எதிர்க்கிறார்கள் எனில் அன்னார் ஜமாஅத்திற்கு உறுதியான பிணைக்கப்பட்டதான ஓர் அமைப்பை வழங்கி விட்டார்கள்.

நான் கூறியது போன்று 1974 –ல் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் உருவாக்கிய குழுவில் இவர்களும் ஓர் உறுப்பினராக இருந்தார்கள். அதில் பணியாற்றும் வாய்ப்பு பெற்றார்கள். அன்னார் கிலாஃபத் கட்டடத்திலேயே தங்கி இருந்தார்கள். ஓரிரு மாதங்களுக்குப் பிறகு வாரம் ஒரு முறை வீட்டிற்குச் சென்று வர முடிந்தது. அதுவும் ஓரிரு மணி நேரங்களுக்கு மட்டுமே சென்று வந்தார்கள். அன்னாரது குழந்தைகளை அங்கு வந்து சந்தித்து வந்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: அந்த நாள்களில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் பல இரவுகள் தூங்கியதில்லை. உட்கார்ந்தே ஓய்வு எடுப்பார்கள். முழு பகலும் முழு இரவும் பணிகளிலும் துஆவிலும் மூழ்கியிருப்பார்கள். டியூட்டியில் இருந்த இவர்களும் கூடவே விழித்திருப்பார்கள்.

அன்னாரது இன்னொரு அறிவிப்பை இவர்கள் தரப்பிலிருந்து அவரது மகன் கூறுகிறார்கள்: 1984 –ல் சோதனையான காலத்தில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய குழுவில் இவர்களும் இருந்தார்கள். அன்னார் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபா, ஹஸ்ரத் நான்காவது கலீஃபா இருவருக்கும் ஏற்பட்ட நெருக்கடியாக சூழ்நிலையிலும் எந்த பதற்றமும் இன்றி இவர்கள் மிகவும் Relax ஆக இருந்தார்கள். அன்னாருக்கு இன்னொரு பெருமையும் உண்டு. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹிஜ்ரத் செய்த போது ரப்வாவிலிருந்து கராச்சி வரை செல்லும் பயணக் குழுவில் அன்னாரும் இருந்தார்கள். லாஹூரில் 2010 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் தேதி சம்பவம் நடந்த நாளில் அன்னார் மிகவும் நோயுற்ற நிலையிலும் கூட அன்னார் மிக தைரியத்துடன் அந்த நெருக்கடியான நிலையை சமாளித்தார்கள். ஒவ்வொரு ஷஹீதின் ஜனாஸா வரும்போதும் கடும் வெயில் காலமாக இருந்தும் தாமே வந்து ஜனாஸா தொழ வைத்தார்கள். அடக்கும் இடத்திற்கும் சென்றார்கள். ஒருவரது தகுதிக்கேற்ப அவர்களுக்கு மதிப்பளிப்பதை அவர்கள் மிகவும் கருத்தில் கொண்டிருந்தார்கள்.

அன்னாரது மகன் மிர்ஸா அதீல் அஹ்மது அவர்கள் எழுதுகிறார்: ரப்வாவின் உள்ளூர் அறிக்கையை நாங்கள் அனுப்பும்போது கவனமின்மை –யினால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெயரை எழுதும்போது 'ஸாது' என்று எழுதப்பட் –டிருந்தது. ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பெயருடன் 'அலைஹிஸ்ஸலாம்' என்றும் எழுதப்பட்டிருந்தது. அன்னார் குறிப்பாக இது தொடர்பாக கவனமூட்டி –னார்கள். ஒருவரது தகுதிக்கேற்ப அவர்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பெயர் எழுதும்போதும் 'ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்' முழுமையாக எழுத வேண்டும் என்று கூறினார்கள்.

தொழுகைகளை மிகவும் பேணி வந்தார்கள். மிகவும் நிர்பந்தமான நிலையில் மட்டுமே

தொழுகைகளை சேர்த்து தொழுவார்கள். கடைசி நோயின் வேளையிலும் மருத்துவமனையில் இருக்கும்போது ஒரு சில தொழுகைகளை தவிர எல்லா தொழுகைகளையும் குறித்த நேரத்தில் தொழுது வந்தார்கள். இறுதி நாள்களில் நாஸிர் அஃலாவாக இருந்தார்கள். நிறைய பொறுப்புகள் இருக்கும். ஜமாஅத் விவகாரங்கள் தொடர்பாகவும் ஜமாஅத் கேஸ்கள் பற்றியும் மிகவும் கவலை இருந்தது. மீண்டும் மீண்டும். மருத்துவமனையில் வைத்தும் கூட இன்னென்ன கேஸ் நிலவரம் என்ன? Update என்ன? என்று கேட்டுக் கொண்டே இருந்தார்கள்.

அதுபோன்று நாஸிர் அஃலா உள்ளூர் அமீர் என்ற முறையில் மக்கள் தமது சந்தோஷமான நிகழ்ச்சிகளுக்கு அவர்களுக்கு அழைப்பு விடுப்பார்கள். அப்போது கண்டிப்பாக செல்வார்கள். இது எனது கடமைகளில் சேரும். நான் காலத்தின் கலீஃபாவின் பிரதிநிதியாக இதனைச் செய்கிறேன் என்று கூறுகிறார்கள். அதே போன்று மரண நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார்கள். தேவை உள்ளவர்களை விசாரிப்பதற்காக செல்வார்கள். நோயுற்ற நிலையிலும் சரியான நேரத்துக்கு அலுவலகம் வந்து முழு நேரம் அங்கிருப்பதும் அன்னாரது பிரத்யேக அழகாக இருந்தது.

இறுதி நோயின்போதும் கூட இவர்கள் அலுவலகத்துக்கு வந்திருந்தார்கள். அப்போது பல மக்களும் அலுவலகத்திற்கு வராமல் இருந்ததை அவர்கள் பார்த்தார்கள். அப்போது அவர்களிடம் இருந்து எல்லாருக்கும் ஒரு சுற்றறிக்கை வந்தது. நானே குறித்த நேரத்தில் அலுவலகத்திற்கு வரும்போது உங்களால் ஏன் வர முடியாது என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. நிர்வாக அடிப்படையில் பிடிக்க வேண்டிய நிலை இருந்தால் அதிலும் கடினம் காட்டினார்கள். ஆனால் அன்புடன் புரிய வைக்கவே விரும்பினார்கள்.

இன்னொரு சிறப்பும் அவர்களுக்கு இருந்தது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பாகிஸ்தானிலுள்ள இஸ்லாமாபாத்தில் வஃபாத் ஆனார்கள். அப்போது இவர்கள்தான் அன்னாருக்கு ஜனாஸா தொழ வைத்தார்கள். ஏனெனில் அன்னார் அஞ்சுமனின் உறுப்பினராக இருந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அங்கு இருந்தார்கள். அன்னாரும் இவர்களை தொழச் சொன்னார்கள். நீங்கள் வயதில் மூத்தவர்; நீங்கள் தொழுங்கள் என்று இவர் கூறியபோது நான்காவது கலீஃபத்துல் மஸீஹ், நீங்கள் அஞ்சுமனில் உறுப்பினர். எனவே நீங்களே தொழுங்கள் என்று கூறினார்கள். அது போன்று ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை குளிப்பாட்டும் வாய்ப்பையும் அன்னார் பெற்றார்கள்.

கண்ணியத்திற்குரிய மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்: 1974 –ன் சூழ்நிலையில் 2–3 மாதம் இங்கு தங்கினார்கள். நிலைமை மாறிய பிறகு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் வீட்டிற்குச் செல்லுமாறு கூறினார்கள். அத்துடன் சில பணிகளை என்னிடம் ஒப்படைத்து அது குறித்து தினமும் காலை உணவு வேளையில் அது பற்றிய அறிக்கை தருமாறு கூறினார்கள். தினமும் சில கட்டளைகளைப் பெற்றுச் சென்று அதனை முடித்து அறிக்கையும் தாமதமின்றி கொடுப்பார்கள்.

அதுபோன்று ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் சாஹிப் எழுதுகிறார்: ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வஃபாத்துக்கு பிறகு நான்காவது கிலாஃபத் காலக்கட்டத்தில் இரண்டாவது நாள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடமிருந்து அலைஸல்லாஹு பிகாஃபின் அப்தஹு என்று எழுதப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மோதிரம் தொலைந்து விட்டது. அன்னாருக்கு பெரும் கவலை ஏற்பட்டது. அன்னார் மிர்ஸா குர்ஷித் அஹ்மத் சாஹிபை அழைத்து கூறினார்கள்: நீங்கள் எனது விசுவாசமிக்கவர் என்றார்கள். ஒவ்வொரு கிலாஃபத்திற்கும் அவர் விசுவாசியாகவே இருந்தார்கள். அதனை தேடி எடுத்துத் தரும் பொறுப்பை ஹுஸூர் அவர்கள் அன்னாரிடம் ஒப்படைத்தார்கள். பிறகு அல்லாஹ்வின் அருளால் அது கிடைத்தும் விட்டது.

கடந்த வருடம் மிர்ஸா குர்ஷித் அஹ்மத் சாஹிப் உடைய மனைவி வஃபாத் ஆகி விட்டார்கள். அதன் பிறகு இதய கோளாறு அதிகமாகி விட்டது. முதலிலேயே இருந்ததுதான். இங்கு மாநாட்டிற்கு வாருங்கள் என்று நான் கூறியபோது என்னால் பெரும் பயணம் செய்ய முடியாது என்றார்கள். ஆனால் பிறகு வந்தார்கள். இங்கு வந்து உடல் நலம் நன்றாக ஆனது. என்னை சந்திக்க தினமும் இரவில் வருவார்கள். சீதோஷண நிலை எவ்வாறு இருந்தாலும் தினமும் இரவில் வந்து விடுவார்கள்.

லாஹூரின் லஜ்னா தலைவியான கண்ணியத்திற்குரிய பவ்ஷியா சமீம் சாஹிபா கூறுகிறார்கள்: இவர் ஹஸ்ரத் அமத்துல் ஹபீஸ் பேகம் என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மகளின் மகள் ஆவார். அமத்துல் ஹபீஸ் பேகம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கடைசி மகள் ஆவார்கள்.

லாஹூரின் லஜ்னா தலைவி அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: நாஸிர் ஆலா ஆன பிறகு இவர்களது நற்சிறப்பு இன்னும் அதிகமாக வெளிப்பட்டது. மிகவும் எளிய மார்க்க சேவகராக இருந்தார்கள். நான் பலமுறை போன் செய்துள்ளேன். கூட்டங்களில் இருந்தால் பிறகு மீண்டும் அவர்களே போன் செய்வார்கள். பலமுறை இவ்வாறு போன் செய்துள்ளார்கள். மர்யம் ஸாதி ஃபண்டிலிருந்து உதவி கேட்டு விண்ணப்பம் வந்தால் அல்லது அவசர உதவியாக கேட்கப்பட்டால் போன் செய்து அவர்களிடம் கூறுவேன். அவர்கள் மிகவும் பொறுமையுடன் அமீர் சாஹிபிடம் கேட்டு வாங்கி கொள்ளுங்கள் அல்லது நீங்களே ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். பிறகு நான் பணம் அனுப்புவேன் என்பார்கள். நான் அவரைப் போன்று அனுதாபம் உள்ள ஒருவரை பார்த்தில்லை. ஒருமுறை எனது ஊரில் உள்ள ஓர் இளம் பெண்ணுக்கு ஒரு சோதனை ஏற்பட்டது. பெண் கையை விட்டு சென்று கொண்டிருந்தார். யார் பேச்சையும் கேட்க மறுத்தார். நான் அன்னாரிடம் இந்த கேஸை அனுப்பினேன். மிகவும் அனுதாபத்துடன் கையாண்டார்கள். அப்போது அன்னார் காதியான் சென்று கொண்டிருந்தார்கள். ஜல்ஸா அல்லாத சாதாரண நாள்களாக அது இருந்தது.

அவர்கள் கூறினார்கள்: நான் காதியானில் பைத்துத் துஆவுக்குச் சென்று அந்த பெண்ணுக்காக துஆ செய்தேன் என்றார்கள். பிறகு அந்த பெண் திருந்தினாள். பிறகு திருமணம் ஆகி விட்டது. அப்பெண்ணின் திருமணத்திற்கு ஓர் அழகிய நகை செட் அனுப்பினார்கள். பிறகும் விசாரித்து வந்தார்கள். மிகவும் அனுதாப உணர்வு உள்ளவர். எப்போது நான் அவர்களிடம் ஆலோசனை கேட்டாலும் நல்ல ஆலோசனைகளை தருவார்கள். மிகவும் துஆ செய்பவர்கள். இதுபோன்ற பெரியவர் எங்கே கிடைக்கப் போகிறார்? உள்ளம் மிகவும் துக்கமடைகிறது. அல்லாஹ் கிலாஃபத்துக்கு மிகச் சிறந்த மாற்று அருளை வழங்குவானாக. குடும்பத்திலும் அவர்களின் இடத்தை நிரப்புபவர்களை ஏற்படுத்துவானாக.

தஹ்ரீகே ஜதீதின் வகீலுல் அஃலா சவுத்ரி ஹமீதுல்லாஹ் சாஹிப் கூறுகிறார்கள்: தஃலீமுல் இஸ்லாம் கல்லூரி லாஹூரிலிருந்து ரப்வாவுக்கு மாற்றப்பட்ட போது ஆங்கிலம் கற்பித்த அஹ்மதி அல்லாத ஆசிரியர் ஒருவர் ரப்வாவுக்கு வரவில்லை. அதன்பிறகு மிர்ஸா குர்ஷித் அஹ்மத் 1956 –ல் புதிதாக அதனை பொறுப்பெடுத்து நடத்தினார்கள். அன்னாரது ஆங்கிலம் மிகவும் நன்றாக இருந்தது. அவர்கள் இருந்த காலத்தில் ஆங்கிலத்தின் தரம் நன்றாக இருந்தது என்பது எனக்கு நினைவிருக்கிறது.

பிறகு அன்னாரைப் பற்றி சவுத்ரி ஹமீதுல்லாஹ் சாஹிப் எழுதுகிறார்: மென்மையான இயல்பு கொண்டவர். இளகிய

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29
SUCCESS INDIA
PROMOTERS
Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237
METAPLAST
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP
# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

மனமும் இரக்கமும் வாய்ந்தவர். ஏழைகளை மிகவும் கவனித்து வந்தார். சொந்த முறையிலும் சரி ஜமாஅத் அளவிலும் சரி கல்லூரியில் இருக்கும் போதும் சரி குத்தாம் அன்ஸார் அமைப்புகள் மற்றும் காதியான் ஜல்ஸாவுக்கான ஏற்பாடு ஆகிய அனைத்து பணிகளிலும் என்னுடன் மிகவும் ஒத்துழைத்து வந்தார்கள். மக்களின் சுக துக்கங்களில் கண்டிப்பாக பங்கெடுப்பார்கள். திருமணம் என்றாலும் வஃபாத் என்றாலும் அங்கு செல்வார்கள். ஒருமுறை ஆண்டு மாநாட்டின் பழைய தொண்டர் ஒருவர் மரணித்து விட்டார். மியான் சாஹிபுக்கு அது தெரியாமல் போகாது. தெரிந்தபோது மிகவும் ஆதங்கமும் வருத்தமும் அடைந்தார்கள்.

நஸாரத்தே உலியாவில் பணியாளராக இருந்த துஃபைல் சாஹிப் கூறுகிறார்: இவர்கள் அதிக சிறப்பம்சங்களுக்கு எஜமானராகத் திகழ்ந்தார்கள். அவற்றைக் கூறுவது அவ்வளவு எளிதல்ல. மிகவும் அனுதாபமும் அன்பும் மிக்கவர். பழகுவதற்கு எளியவர். கண்டால் மிகவும் இரக்கம் கொள்வார். எளிய குணமும் மிகவும் கண்ணியமானவரும் மிகவும் அன்புக்குரியவரும் ஆவார். அடியேனுக்கு அன்னாரின் கீழ் சுமார் 10 வருடங்கள் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. ஒருபோதும் எக்காலத்திலும் அன்னார் கோபத்தைக் காட்டியதாக எனக்கு நினைவு இல்லை. ஏதாவது தவறுகள் நிகழ்ந்து விட்டால் மிகவும் இரக்கத்துடன் அதனைப் புரிய வைத்தார்கள்.

நஸாரத்தே உலியாவின் முரப்பி காஜா முஸஃப்பர் சாஹிப் கூறுகிறார்: கடுமையான நீண்ட நாள் நோயையும் பொறுமையுடன் எதிர்த்து நின்றார்கள். நீண்ட காலம் அன்னாருககு சேவை செய்யும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அன்னார் தந்தையை விட மிகவும் அன்புள்ளவர். இரக்க மனம் படைத்தவர். படைப்பின சேவைக்கு முன்னுரிமை தருபவர். பலமுறை எனக்கு அனுபவம் உண்டு. ஒரு தேவையுள்ள ஆணோ பெண்ணோ வந்தால் அவர்களுடன் சந்திக்க வைக்கப்பட்டால் அன்னார் அவர்களின் தேவைக்கு ஏற்ப உணவுப் பொருட்கள், கட்டில், படுக்கை, டி.வி பணம் என்று ஏதாவது உதவி செய்வார்கள். இன்னும் சில வேளைகளில் ஒரு தேவையுள்ளவர் சென்ற பிறகும் கூட என்னை அழைத்து இவரது வீட்டின் நிலைமையை தெரிந்து வாருங்கள் என்று கூறுவார்கள்.

முரப்பி சாஹிப் கூறுகிறார்: நான் மறுநாள் ரிப்போர்ட் கொடுத்தால் அவர் கூறுவார். இவர் மிகவும் தேவை உள்ளவர் என்று எனக்கு பட்டது. இவருக்கு உதவி செய்யப்படவில்லை. இவ்வாறு விண்ணப்பத்தை ஆய்வுக்கு உட்படுத்தி விடுவார்கள். தேவைக்கேற்ப உதவி செய்வதற்காக அவ்வாறு செய்வார்கள். அவர் கூறுகிறார்: மிகவும் புன்னகையுடன் இருப்பவர். எளிமையாக இருப்பவர். ஒருவர் விரும்பியவாறு அவருக்கு தீர்ப்பு கிடைக்காத போது முறையீடுகள் மற்றும் குற்றச்சாட்டுடன் வருபவருக்கு மிகவும் கவனமாக அன்புடன் புரிய வைப்பார்கள். கவனமாக நீண்ட நேரம் அவர் சொல்வதைக் கேட்பார்கள். சொல்பவரிடம் பொறுமையாக உட்கார்ந்து கேட்பது ஒவ்வொரு பொறுப்பாளரின் கடமையாகும். இதனால் அதிக பிரச்சனைகள் தீர்ந்து விடும்.

முரப்பி சாஹிப் எழுதுகிறார்: அலுவலகத்தில் ஒருவர் நின்றவாறே தனது விவகாரத்தை எடுத்து வைத்தார். பொறுமையின்மையைக் காட்டியவாறு தனது விண்ணப்பப் படிவத்தை கிழித்துப் போட்டார். அன்னார் அமைதியாக இருந்தார்கள். அநேகமாக அவருக்காக துஆ செய்து கொண்டு இருந்திருப்பார்கள். அவர் கூறுகிறார்: நான் அருகில்தான் நின்று கொண்டிருந்தேன். அவரது பொறுமையின்மை எனக்கு தீயதாகப் பட்டது. நான் ஏதோ சொல்ல நினைத்தேன். அன்னார் ஒன்றுமில்லை விட்டு விடுங்கள் என்று கூறினார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு நடைமுறை உள்ளது என்றார்கள். அன்னாரது மன்னிக்கும் தன்மைன பொறுமை இவற்றை பார்த்து எனக்கு பொறாமையாக இருந்தது.

நோயுற்றுப் பலவீனமாக இருந்த நிலையிலும் கூட மிகவும் நற்குணம் மிக்கவராக இருந்தார்கள். இவர்களது நினைவுத்திறனும் கூட மிகவும் பாராட்டிற்குரியது. நல்ல ஞாபக சக்தி இருந்தது. தினமும் நூற்றுக்கணக்கான கடிதங்களைப் படிப்பார்கள். ஆனால் பல நேரங்களில் இவ்வாறு நடந்துள்ளது. பல மாதங்களுக்கு முன்பு File ஆகிய ஒரு கடிதம் தொடர்பாக அதனை அனுப்பியவர் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக அல்லது துஆவுக்காக மீண்டும் எழுதும்போது பணியாளர் அதனை கணினியில் தேடுவார். ஆனால் அன்னாருக்கு நினைவில் இருக்கும். இவ்வாறு வழிகாட்டப்பட்டது அல்லது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது நினைவில் இருக்கும். என்னென்ன தாள்கள் எங்கெங்கு உள்ளன? எந்தெந்த ஃபைல்கள் எங்கெங்கு உள்ளன என்பது வரை அவரது நினைவில் இருக்கும்.


நாஸிம் கஸா ராஷீத் ஜாவித் சாஹிப் கூறுகிறார்: ஒருமுறை ஒரு விவகாரத்தில் கணவர் எந்நிலையிலும் சமாதானத்தை விரும்பினார். மனைவி என்னிடமிருந்து பெற்ற தொகையை திரும்பத் தர வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். கணவரிடம் பணம் இல்லை. நாஸிம் கஸா கூறுகிறார்: நான் மியான் சாஹிபிடம் சென்று கூறினேன். நீங்கள் தாருங்கள். நான் சிறிது நாள்களுக்குப் பிறகு தந்து விடுகிறேன் என்றேன். பிறகு நான் கூறினேன். நீங்களே கொடுத்து விடுங்கள். உடனே அன்னார் கூறினார்கள்: அதனால் பிரச்சனை தீரும் என்றால் எழுதி அனுப்புங்கள். ஒரு சில நிமிடங்களில் அப்பெண்ணிற்குரிய பணம் அவளிடம் வழங்கப் –பட்டது. உடனே சமாதானம் ஆகி விட்டது.

ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனின் முரப்பி ரப்பானி சாஹிப் கூறுகிறார்: ஒருமுறை எனது சகோதரி ரப்வா வந்திருந்தார். அவருக்கு தோல் நோய் இருந்தது. தூய்மையைக் கருத்தில் கொண்டு விருந்தினர் இல்லத்தில் தங்குவதற்கு அனுமதி கேட்டார். சில நிர்வாகச் சட்டத்தின் அடிப்படையில் எனது சகோதரியிடம் நாஸிர் அஃலாவின் சிறப்பு அனுமதியுடனே தங்க முடியும் என்று கூறப்பட்டது. மிகப் பெரும் பொறுப்பிலுள்ள ஒருவரிடம் எப்படி கேட்க முடியும்? நேரம் வழங்குவார்களா? இல்லையா? என்ற தயக்கம் ஏற்பட்டது. இருந்தும் சென்றோம். எங்களை அழைத்தார்கள். அனுதாபமிக்க தந்தை தனது மகளை சந்திப்பது போன்று எங்களை சந்தித்தார்கள். உடனே எங்களுடைய கஷ்டத்தை அகற்றினார்கள். இதனால் எங்களுக்கும் ஜமாஅத் அமைப்பின் மீது பெரும் நம்பிக்கை ஏற்பட்டது.

மாவட்ட அமீர் ஹோஷாப் முனவ்வர் முஜோக்கே சாஹிப் எழுதுகிறார்: மிகவும் அனுதாபம் மிக்க மிகவும் மனித குலத்திற்கு பயன்தரும் மனிதர் ஆவார்கள். சின்ன சின்ன விஷயத்திலும் மிகவும் நுட்பமான விஷயங்களிலும் மிகவும் கவனம் செலுத்துபவர்களாக அவர்கள் இருந்தார்கள். இதற்கு ஒரு சம்பவத்தைக் கூறுகின்றேன். இது எனது உள்ளத்தில் அழியாத ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. அநேகமாக இது 2015 –ன் தொடக்கத்தில் நடந்த நிகழ்ச்சியாகும். நான் எனது அலுவலகத்தில் அமர்ந்திருந்தேன். எனது மாவட்டத்தைச் சார்ந்த இரண்டு மிகவும் ஏழ்மையான பெண்கள் கடிதத்துடன் என்னிடம் வந்தனர். மியான் சாஹிப் நாஸிர் அஃலா அந்தக் கடிதத்தை என்னிடம் அனுப்பினார்கள். இந்த கடிதத்தில் மாவட்ட அமீர் உடைய பரிந்துரையை அன்னார் கேட்டிருந்தார்கள். நான் அந்தப் பெண்களிடம் விஷயத்தைக் கேட்டேன். அவரிடம் நேர்காணல் செய்தேன். உடனே மாவட்ட அமீர், இந்த விண்ணப்பத்தை தலைமையகத்திற்கு அனுப்புவதற்குப் பதில் மாவட்ட அளவில் தந்து விடுகிறோம் என்று முடிவெடுத்தவாறு அவ்விருவரையும் அந்த பிரிவின் செயலரான உமூரே ஆமாவுக்கு அனுப்பினார். பிறகு அவர்களுக்கான தொகை கிடைத்தது. மறுநாள் நான் அலுவலகத்தில்


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூக்கர்
✆ 94869 37769

இருந்தபோது மியான் சாஹிபுடைய போன் வந்தது. அமீர் பரிந்துரைக்காக நேற்று இரண்டு ஏழை பெண்களை அனுப்பினேன். அவர்கள் இன்னும் வரவில்லையே? அந்த பெண்களை பணம் கொடுக்காமல் திருப்பி அனுப்பி விடக் கூடாதே என்ற கவலை உள்ளது. உடனே பரிந்துரையுடன் அவர்களை என்னுடன் அனுப்புங்கள். அப்போது தான் அவர்களுக்கு உரிய நேரத்தில் உதவி வழங்க முடியும் என்று கூறினார்கள். நான் அன்னாரிடம், மாவட்ட அளவில் உதவி வழங்கப்பட்டு விட்டதால் உங்களிடம் வரவில்லை என்று கூறினேன்.

இந்த சிறு சம்பவம், அன்னாருக்கு ஏழைகளுக்கு உதவி செய்வதற்கும், படைப்பின சேவை மற்றும் சிறு சிறு விஷயத்தையும் கவனத்தில் கொள்வது ஆகியவற்றிற்கும் மற்றும் அன்னாரின் பெரிய மனிதத் தன்மைக்கும் ஒரு சிறு உதாரணமாகும். இந்த உணர்வு நமது ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் இருக்க வேண்டும். வேலைக்காக அனுப்பி விட்டோம் என்பதல்ல. எந்த விண்ணப்பம் என்றாலும் விண்ணப்பித்தவர் அதனை Follow-up செய்தாலும் செய்யாவிட்டாலும் பொறுப்பாளர் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் வரை அந்த விவகாரம் முடிவுக்கு வருவதற்காக முயற்சி செய்ய வேண்டும். அதனை அலட்சியமாக விட்டு விடக் கூடாது. நான் ஏற்கெனவே கூறியதுபோன்று பொறுப்பாளர்களிடம் இந்த உணர்வு ஏற்பட்டால் இதனால் நமது பல பணிகள் எளிதாகி விடும்.

ஹாஃபிஸ் முஸஃப்பர் அஹ்மது சாஹிப் எழுதுகிறார்: ஹஸ்ரத் மியான் சாஹிப் கிலாஃபத்தின் மீது பற்றுள்ளவர் என்பதற்கு நான் சாட்சியாக உள்ளேன். தமது கடைசி மூச்சு உள்ளவரை கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு கட்டுப்படுவதிலம் விசுவாசத்திலும் எந்த நிமிடமும் குறைவு ஏற்பட விட்டதில்லை. அல்லாஹ் மற்றும் அடியார்களுக்கு செய்யும் தொண்டில் முழு வாழ்வையும் கழித்தார்கள். எப்போதும் அன்னாரிடம் ஜமாஅத்தின் பெரிய பொறுப்பு இருந்தும் மிகவும் நல்லியல்பு நல்லொழுக்கம் உடையவராக அவர்கள் இருந்தார்கள்.

ஹாஃபிஸ் சாஹிப் மேலும் எழுதுகிறார்: ஜமாஅத்தான தொழுகையை நிறைவேற்றுவதில் மிகச் சிறந்த முன்மாதிரியாக இருந்தார்கள். இவர்கள் சத்ர் அன்ஸாருல்லாஹ்வாக நியமிக்கப்பட்ட போது ஒவ்வொரு கூட்டங்களிலும் ஜமாஅத்துடன் தொழுதல், தொழுகை நிலைநாட்டுதல் குறித்து கவனமூட்டி வந்தார்கள். ஒரே விஷயத்தையே நான் சுற்றி வருவதாக உங்களுக்கு தோன்றலாம். ஆனால் எனது கடமை உங்களுக்கு நினைவூட்டுவதாகும். அதனை நான் எப்படி விட முடியும்? என்றும் தானே கூறவும் செய்வார்கள். சில பொறுப்பாளர்கள் ஜமாஅத்துடன் தொழுவது ஒருபுறமிருக்கட்டும். சில தொழுகைகளை தொழுவதைக் கூட விட்டு விடுகின்றனர். பிறகு வெயிலிலும் குளிரிலும் அலுவலகத்திற்குச் செல்வதும் அவர்களது முறையான வழக்கமாக இருந்தது.

ஹாஃபிஸ் சாஹிப் எழுதுகிறார்கள்: நேரம் தவறாமைக்கு மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தார்கள்.


நஸாரத் உலியாவிலுள்ள அன்னாரது ஒரு கிளர்க் மஹ்மூது அன்வர் சாஹிப் எழுதுகிறார்: அன்னாரது அனுதாபத்தையும் பரிவையும் மறப்பது எளிய விஷயமல்ல. பலவீனமான நிலையிலும் அலுவலகப் பணிகளில் மூழ்கி இருப்பார். தன்னை விட மார்க்க சேவைக்கு முக்கியத்துவம் வழங்கினார்கள். தனது வஃபாத்திற்கு முன் ஜனவரி 1 ஆம் தேதி அலுவலகத்திற்கு வந்தார். மூச்சுத் திணறல் அதிகமாக இருந்தது. மிகவும் சிரமப்பட்டு தனது கஷ்டத்தை தெரிய விடாமல் அடக்க முயற்சி செய்தார்கள். என்னிடம் அவர்கள் கூறினார்கள்: இன்று எனது உடல்நிலை சரியில்லை. முழுமையாக என்னால் உட்கார முடியாது. நான் வீட்டிற்குச் செல்வது வேலை செய்யாமல் இருப்பதற்காக அல்ல. கையெழுத்திட வேண்டிய கடிதங்களை உடனே கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். அவர்கள் கூறியதற்கிணங்க உடனே நான் எடுத்துக் கொடுத்தேன். சில வஸிய்யத் கோப்புகளில் கையெழுத்து வாங்கிய பிறகு உங்களுக்கு உடல்நிலை சரியில்லை. பிறகு வாங்கிக் கொள்ளலாம் என்று நான் கூறியபோது, அன்னார் எல்லா கோப்புகளிலும் இப்போது கையெழுத்து வாங்கி விடுமாறு கூறினார்கள். பிறகு முக்கியமான வழிகாட்டல்கள் வழங்கி விட்டு, நாஸிர்மார்களை சந்தித்துப் பேசி விட்டுச் சென்றார்கள். தனது செயல் மூலமாக மார்க்க சேவை எவ்வாறு செய்ய வேண்டும்? வக்ஃபின் ஆன்மா எது என்பதையும் காட்டி விட்டார்கள்.

ஜமாஅத்தின் முரப்பி மலக் முஹம்மது அஃப்ஸல் சாஹிப் கூறுகிறார்: முன் கூட்டியே வந்து பள்ளிவாயிலில் அமர்வது, ரமலான் மாதத்தில் அஸர் தொழுகைக்குப் பிறகு மஸ்ஜிது முபாரக்கில் அமர்ந்து குர்ஆன் ஓதுவதில் மூழ்கி விடுதல், எவராவது ஒரு மனிதர் தனது பிரச்சனைகளைச் சொன்னால் அதனை கவனமாகக் கேட்டு அதற்கு தீர்வு கூறுதல் ஆகியவை ரப்வாவின் ஒவ்வொரு மனிதரும் தினமும் பார்த்து வரும் காட்சியாகும்.

அவர் கூறுகிறார்: ஜாமிஆவில் கல்வி கற்பிக்கும் போது மிகவும் கஷ்டமாக இருந்தது. துஆ ஒன்றே வழியாக இருந்தது. இந்நிலையில் நான் மிர்ஸா குர்ஷித் அஹ்மது சாஹிபின் அலுவகத்திற்குச் சென்றேன். அதிகமான பணிகள் இருந்த நிலையிலும் கூட என்னை உள்ளே அறைக்குள் அழைத்தார்கள். நான் துஆவுக்காக எனது பிரச்சனையைக் கூறியதும் அனைத்தையும் கேட்டு, தானே கேள்வியும் கேட்டு அனைத்தையும் தெரிந்து கொண்டார்கள். அலுவலகம் வரும்போது நான் இவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வேன் என்று நான் நினைக்கவும் இல்லை. ஆனால் மிகவும் பரிவுடன் அதிகமான நேரம் தந்தார்கள். அலுவலகத்திலிருந்து வெளியே வந்தபோது உள்ளத்தில் இருந்த சுமை மிகவும் எளிதாகி விட்டதாக உணர்ந்தேன். புதிய நம்பிக்கை பெற்றவனக அறையிலிருந்து வெளியில் வந்தேன். இதுவே ஒவ்வொரு பொறுப்பாளரும் அடுத்தவருக்கு ஆறுதல் தர வேண்டிய முறை ஆகும். மென்மை, அனுதாபம் நிறைந்த மலக்கைப் போன்ற மனிதர் ஆக இருந்தார்கள்.


எனது ஒரு நண்பர் கூறுகிறார்: நான் வாலிப வயதுப் பையனாக இருந்தபோது மோட்டார் பைக் ஓட்ட கற்றுக் கொண்டிருந்தேன். அப்போது மிர்ஸா குர்ஷித் அஹ்மது சாஹிப் அவர்களுடைய வீட்டின் வாசலில் சென்று மோதி விட்டேன். அன்னார் அப்போது அங்கிருந்த செடிகளுக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்கள். டிரைவிங் செய்வதற்கு கூடாத வயதில் விழுந்ததோ அவர்களுக்கு முன்பாக என்பதால் எனக்கு வெட்கமாகி விட்டது. வேறு ஒருவராக இருந்தால் அவரது செடிகள் சேதமடைந்ததற்காக கண்டிக்கவும் செய்திருப்பார். ஆனால் அன்னாரின் இயல்பில் எத்தனை பரிவு இருந்தது என்றால் அன்னார் என்னை தூக்கி நிறுத்துவதற்கு உதவி செய்தார்கள். மகனே! அடி ஒன்றும் படவில்லையே என்றும் கேட்டார்கள். வாழ்க்கையை மதிக்கக் கற்றுக் கொள் என்று கருணையோடு புரிய வைத்தார்கள்.

அதுபோன்று முரப்பிமார்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்களை மிகவும் அன்புடன் நடத்துவார். நல்ல பரந்த அறிவு இருந்தும் எளிமை இருந்தது. தமது அறிவு, குறைவாக இருப்பதாகக் கூறுவார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யாவின் பட்டமளிப்பு விழாவில் நான் அன்னாரை எனது பிரதிநிதியாக அனுப்பினேன். அங்கு தனது சொற்பொழிவில் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். நான் எப்போதும் முரப்பிகளின் ஆலிம்களின் வழிகாட்டல்களைக் கேட்கும் பழக்கம் உள்ளவன். அவர்கள் முன் நான் எவ்வாறு பேசுவேன்? என்று கூறினார்கள்.


B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000


National Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house A/c
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company, Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹலோபிலாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

பல விஷயங்களையும் கூறிய பிறகு போதனை செய்தவாறு அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: மிகவும் முக்கியமான விஷயம் என்னவெனில், காலத்தின் கலீஃபாவிடமிருந்து எவை எடுத்துக் கூறப்படுகிறதோ அதனை நாங்களும் சரி முரப்பியாக வெளியே செல்கின்ற நீங்களும் சரி எவ்வளவு செய்ய முடியுமோ செய்ய வேண்டும். நாம் அனைவரும் அவர்களிடமிருந்து பெற்ற அறிவுரைகளை நிறைவேற்ற வேண்டும். அதனை செய்யும் வாய்ப்பை இறைவன் தர வேண்டும் என்று துஆவும் செய்ய வேண்டும்.

பிறகு ஜமாஅத்தின் முரப்பி மசூத் சாஹிப் கூறுகிறார்: மியான் சாஹிபுடன் பலமுறை சந்தித்துள்ளேன். ஒவ்வொரு முறையும் மிகவும் பரிவுடன் சந்திப்பார்கள். அந்த சந்திப்பு உணர்வின் கடலாக இருக்கும். அன்னார் அதிகம் அன்பு காட்டுபவரும் மிகவும் பரிவுள்ளவரும் ஆவார்கள். எளிமையின் உருவாக இருப்பார்கள். சந்திக்க வருபவர்களுக்கு நாற்காலியிலிருந்து எழுந்து சலாம் கூறுவார்கள். கை குலுக்குவார்கள். சிறு பையனாக இருந்தாலும் சரி சந்திக்க ஒருவர் வந்தால் எவ்வளவு பணி இருந்தாலும் விட்டு விட்டு மிகவும் ஆர்வத்துடன் அவர் கூறுவதைக் கேட்பார்கள். மேலும் அவர்களுடன் சகஜமாகி விடுவார்கள்.

அன்னாருடைய அலுவலகத்தில் ஏழை பணக்காரர், பொறுப்பாளர் சாதாரண அஹ்மதி எல்லாரும் ஒன்றாகவே நடத்தப்பட்டார்கள். ஒவ்வொருவரும் கூறும் விஷயத்தைக் கேட்டு தேவையான நடவடிக்கையை மேற்கொள்வார்கள். எவ்வாறு நடவடிக்கை எடுப்பார்கள் என்றால், ஒவ்வொருவரும் அவர்களது பார்வையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருக்கின்றார் என்பது தெரிய வரும்.

டாக்டர் நூரி சாஹிப் எழுதுகிறார்: மக்களின் எண்ணங்கள் உணர்வுகள் குறித்து மற்றவரை விட அதிகமாக கவனம் செலுத்துவார்கள்.

டாக்டர் சாஹிப் கூறுகிறார்: எனக்கு நினைவு உள்ளது. ஒருமுறை ஒரு நோயாளிக்கு ஆஞ்சியோ பிளாஸ்டிற்காக பாதி பணம் சலுகையாக கழிக்கப்பட்டது. அவர் நாஸிர் அஃலாவை சந்தித்தார்கள். அப்போது அன்னார் முழுத் தொகையையும் மன்னித்து விட்டார்கள்.

டாக்டர் நூரி சாஹிப் கூறுகிறார்: தகுதியுள்ள எல்லா நோயாளிக்கும் உதவி செய்யுங்கள் என்று காலத்தின் கலீஃபா கூறியுள்ளார்கள். எனவே அதனை செய்வது நம்மீது கடமையாகும் என்று கூறினார்கள். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது மருத்துவமனையில் பயிற்சி எடுக்கின்ற செவிலியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு எனது மகனிடம் பணம் வாங்கி சுவட்டர் வாங்கி என் தரப்பிலிருந்து அன்பளிப்பாக வழங்குங்கள் என்று என்னிடம் கூறினார்கள். மற்றவர்களின் உழைப்பை புகழ்வார்கள். சிலரது உணர்வுகளை வாயால் வெளிப்படுத்துவது மிகவும் கஷ்டமாகும். இந்த மருத்துவமனையிலிருந்து வெளியே செல்லும்போது உங்களை விட்டு விடைபெறும் போது எனக்கு அதே உணர்வுகளே இருந்தது. அல்லாஹ் உங்களுக்கு இதற்கான மிகச் சிறந்த நற்கூலியை வழங்குவானாக என்று கூறினார்கள்.

பிறகு கிலாஃபத்துடன் மிகச் சிறந்த நேசமும் அன்பும் இருந்தது. தாஹிர் ஹார்ட் மருத்துவமனையுடன் அன்னாருக்கு மிகவும் தொடர்பிருந்தது. டாக்டர் நூரி சாஹிப் எழுதுகிறார்: ஒருமுறை என்னிடம், நூரி, தாஹிர் ஹார்ட் மருத்துவமனை காலத்தின் கலீஃபாவின் குழந்தையாகும். அல்லாஹ் காலத்தின் கலீஃபாவின் ஆசையை நிறைவேற்றுவானாக. உண்மையான பொருளில் இது குணமளிக்கும் வீடாக அமையட்டுமாக என்று கூறினார்கள்.

பிறகு நூரி சாஹிபிடம் கூறினார்: நான் தினமும் துஆ செய்கிறேன். அல்லாஹ் காலத்தின் கலீஃபாவின் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுவானாக.

அவர்கள் நோயுற்றிருந்த நாட்களில் டாக்டர் நூரி சாஹிப் அவர்கள் தினமும் அவர்கள் தொடர்பான அறிக்கையை எனக்கு அனுப்பி வைப்பார்கள். அவ்வாறு ஒருமுறை அனுப்பும்போது என்னிடம் கையைப் பிடித்துக் கொண்டு உணர்ச்சிவசப்பட்டவாறு ஹுஸூருக்கு அனுப்புவதற்கு நம்மிடம் நோய் மற்றும் கஷ்டம் தவிர வேறு நல்ல விஷயங்கள் எதுவும் இல்லையா? என்று கூறினார்கள்.

இதுபோன்று இன்னும் பலரது கடிதங்கள் அன்னாரின் பண்புகளை எடுத்துக் கூறுகின்றன. எளிமை, பரிவு குறித்து ஒவ்வொருவரும் எழுதியுள்ளனர். கிலாஃபத்துடன் தொடர்பு குறித்து ஒருமுறை எனது மனைவியிடம் கூறினார். எனது மனைவி அன்னாரிடம், நீங்கள் காலத்தின் கலீஃபாவுக்காக கண்டிப்பாக துஆ செய்வீர்கள். எனக்கும், பிள்ளைகளுக்காகவும் கூட துஆ செய்யுங்கள் என்று கூறியிருக்கிறார்கள். அப்போது அவர், நான் காலத்தின் கலீஃபாவுக்காகவும், அவரது மனைவி மக்களுக்காகவும் ஒரு சஜ்தாவில் குறிப்பாக துஆ செய்கிறேன் என்று கூறினார்கள். இவ்வாறு சொல்லும்போது அவர்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவர்களாக கூறினார்கள்.

அமீர் மற்றும் மேலதிகாரிகளுக்குக் கட்டுப்படுதல் மிகவும் அதிகமாக அன்னாரிடம் இருந்தது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் நோயுற்ற நாட்களில் 2000 ஆம் ஆண்டில் நானும் மதிப்பிற்குரிய மிர்ஸா குர்ஷித் அஹ்மது சாஹிப் அவர்களும் இலண்டன் வந்திருந்தோம். அப்போது நான் நாஸிர் அஃலாவாக இருந்தேன். ஒருமுறை ஏதோ விஷயத்தில் எனக்கும் அவர்களுக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அன்னார் சற்று வேகமாக நான் சொன்னதை மறுத்தார்கள். பிறகு நான் அவர்களுக்கு சில நாள் முன்பாக பாகிஸ்தான் திரும்பி விட்டேன். அன்னார் சில நாள் கழித்து திரும்பினார்கள். எனது அலுவலகத்திற்கு வந்து மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தார்கள். என்னிடம் நான் மன்னிப்புக் கேட்க வந்துள்ளேன் என்றார். நான் பெரும் தவறு செய்து விட்டேன் என்றார்கள். எனக்கு என்ன தவறு என்று நினைவில் இல்லை.

அவர்கள் கூறினார்கள்: இலண்டனில் இருக்கும்போது இவ்வாறு உங்களுடன் முரண்பட்டுப் பேசினேன். அப்போது எனது குரலில் சிறிது கோபம் சேர்ந்திருந்தது. அது அமீருக்கு கண்ணியம் செய்வதற்கு மாற்றமானது. அதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் என்றார். நான் ஒன்றுமில்லை என்று கூறியும் கூட அவ்வாறு மன்னிப்புக் கேட்டுக் கொண்டே இருந்தார்கள்.

இதுவே அன்னாரின் பணிவாகும். பிறகு சீர்திருத்தத்தையும் தனது வீட்டில் இருந்துதான் ஆரம்பிக்கக் கூடியவர்களாக அவர்கள் இருந்தார்கள். மற்றவரை சீர்திருத்தினோம்; பிள்ளைகளை விட்டு விட்டோம் என்பதல்ல.

சில வருடங்களுக்கு முன்பு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய குடும்பத்தினருக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அதில் அவர்களின் பொறுப்பை சுட்டிக் காட்டினேன். அவர்களுள் சிலர் பற்றி புகார் வந்தது. பொதுவாக அதனை அகற்றுவதற்காக போதனை செய்திருந்தேன். அந்த கடிதத்தை நான் பாகிஸ்தானுக்கு அனுப்பினேன். அங்குள்ள மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உறவினர்களை ஒன்றுகூட்டி எனது கடிதத்தை வாசித்துக் காட்டுங்கள் என்று எழுதினேன். அன்னார் அந்த கடிதத்தை குடும்பத்தார் முன்பு படித்துக் காட்டிய போது மிகவும் உணர்ச்சி பொங்கியவர்களாக, நான் இங்கு தெளிவுபடுத்திக் கொள்கிறேன். எனது பிள்ளைகளும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ள வற்றிலிருந்து தூய்மையானவர்களாக இல்லை. நான் அவர்களிடமும் அவர்களின் மக்களிடமும் கூட இந்த பலவீனத்தை அகற்றுமாறு போதிக்கிறேன். காலத்தின் கலீஃபா நம்மிடம் வைத்திருக்கிற நம்பிக்கையை நாம் காப்பாற்ற வேண்டும் என்று கூறினார்கள். இதுவே அன்னாரின் தக்வாவின் தரமாகும்.

அன்னாரின் இந்த நன்மைகள் பிள்ளைகளிடமும் நிலைக்கட்டுமாக. அல்லாஹ் ஜமாஅத்திற்கும் அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு பற்றும் நன்றியுணர்வுள்ள தூய்மையான தக்வாவின்படி நடக்கக்கூடிய உதவியாளர்களை வழங்குவானாக.

மதிப்பிற்குரிய மிர்ஸா அனஸ் அஹ்மது சாஹிப் அதாவது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மூத்த மகன் பற்றி இவ்வாறு எழுதுகிறார்: சகோதரர் குர்ஷீது அஹ்மது சாஹிப் வாழ்நாள் முழுவதும் கிலாஃபத்தின் பாதத்தில் இருந்தவாறு கடைசி காலம் வரை இயக்கத்திற்காக தொண்டாற்றி வந்துள்ளார்.

அல்லாஹ் அன்னாரின் அந்தஸ்தை உயர்த்துவானாக. அன்னாரது தொண்டுகளை ஏற்றுக் கொள்வானாக. எண்ணற்ற அருள்களின் அடியில் அன்னாரை வைப்பானாக. அன்னார் தனது கடமையை நிறைவேற்றி விட்டார்கள். அன்னார் முற்றிலும் சரியாக எழுதியுள்ளார்கள். நிச்சயமாக அன்னார் தனது கடமையை முழுமையாக நிறைவேற்றினார்கள்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் நமது கடமையை நிறைவேற்றச் செய்வானாக. ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் அன்னாரது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன் – இன்ஷா அல்லாஹ்.

★ ★ ★ ★ ★

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி…)*

கேட்கின்றோம். பெருமானார் (ஸல்) அவர்கள் நேர்வழி பெற்ற கலீ∴பாக்களின் அறிவுரை மற்றும் நடைமுறைக்கு ஏற்ப நடக்க முயற்சி செய்யவும் என்று போதனை செய்துள்ளார்கள்.

ஹதீஸில் இவ்வாறு வருகின்றது: விஷயத்தை கேளுங்கள். அதற்கு கட்டுப்பட்டு நடங்கள். ஓர் ஆப்பிரிக்க அடிமை உங்களது அமீராக இருந்தாலும் சரியே. ஏனென்றால், ஒரு காலம் வரவிருக்கின்றது. அப்போது எனக்கு பிறகு உங்களில் எவராவது உயிரோடு இருந்தால் அவர் மிகப்பெரும் கருத்து வேறுபாட்டைக் காண்பார். எனவே, நீங்கள் அத்தகைய இக்கட்டான தருணத்தில் எனது மற்றும் எனது வழிகாட்டலைப் பெற்றிருக்கின்ற நேர்வழி பெற்ற கலீ∴பாக்களின் நடைமுறையை பின்பற்றி நடக்கவும். அதில் வலுவாக நிலைத்திருங்கள் (முஸ்னது அஹ்மது) என்று கூறினார்கள்.

காலத்தின் கலீ∴பா நமது ரோல் மாடலாக இருக்கின்றார்கள் என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு காலத்தின் கலீ∴பாவின் போதனைகளையும் அவர்களது நடைமுறைக்கு ஏற்பவும் நடப்பது மிகவும் அவசியமானதாகும். ஏனென்றால், காலத்தின் கலீ∴பா அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கையின் முன்மாதிரிக்கு ஏற்ப எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை காலத்தின் கலீ∴பா அவர்கள் நமக்கு கற்றுத் தருகின்றார்கள். ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின் அருளுக்குரிய காலக்கட்டத்தில் அன்னாரது வாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றி ஆபித் கான் சாஹிப் அவர்களின் டைரியிலிருந்து நமக்கு தெரிய வருகின்றது. ஹுஸுர் அவர்களிடம் காலத்தின் கலீ∴பாவிற்கு கட்டுப்படுவதிலும் அவர்கள் மீது அன்பு கொள்வதிலும் நாம் எவ்வாறு முன்னேற முடியும்? என்று கேட்கப்பட்டது. அதற்கு காலத்தின் கலீ∴பா கூறும் விஷயங்களை மிகவும் கவனத்துடன் கேளுங்கள். மேலும், காலத்தின் கலீ∴பாவுடன் மிக அதிகமாக அன்பு கொள்ளுங்கள். அவ்வாறு செய்தால் பிறகு காலத்தின் கலீ∴பாவிற்கு கட்டுப்பட்டு நடப்பதிலும் அவர்கள் மீது அன்பு கொள்வதிலும் நீங்கள் முன்னேறிச் செல்வீர்கள் என்று ஹுஸுர் அவர்கள் பதில் கூறினார்கள். மேலும், ஹுஸுர் அவர்கள் நான் ஒரு தீர்ப்பைக் கூறுவதற்கு முன்னதாக முதலில் அல்லாஹ்வின் முன்பு குனிகின்றேன். எனது பலவீனங்களுக்காக பாவமன்னிப்புக் கோருகின்றேன். பிறகுதான் எந்த தீர்ப்பையும் கூறுகின்றேன் என்று கூறினார்கள்.

❖ இந்த அமர்வில் மூன்றாவதாக மதிப்பிற்குரிய மவ்லானா அஸ்வந்த் யார் முனீப் சாஹிப் (ரப்வாவின் அஹ்மதிய்யா வரலாற்றுத் துறையின் பொறுப்பாளர்) அவர்கள் “ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் வாழ்க்கை மற்றும் ஆ∴ப்கானிஸ்தானைச் சார்ந்த மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் (ரலி) அவர்களின் வாழ்க்கை” என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அவர்கள் சூரா அல் அஹ்ஸாபின் 24 -வது வசனத்தை ஓதிய பிறகு இவ்வாறு கூறினார்கள்: கர்பலாவில் அநீதிக்கு ஆளான ஷஹீதுகளின் தலைவரும் இறை தூதர் (ஸல்) அவர்களின் பேரரும் ஹஸ்ரத் ∴பாத்திமா (ரலி) மற்றும் ஹஸ்ரத் (ரலி) ஆகியோரின் கண்ணின் மணியுமான ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் பிறப்பதற்கு முன்னதாக ஹஸ்ரத் ரஸுலே கரீம் (ஸல்) அவர்களின் சிற்றன்னையான ஹஸ்ரத் உம்மே ∴பஸ்ல் அவர்கள் ஓர் உண்மையான கனவில் ஹஸ்ரத் ரஸுலே கரீம் (ஸல்) அவர்களின் தூய உடலிலிருந்து ஒரு துண்டு அவர்களது மடியில் வந்து விழுவதைக் கண்டார்கள். இக்கனவிற்கு விளக்கமளித்தவாறு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ∴பாத்திமா (ரலி) அவர்களுக்கு ஆண் குழந்தை பிறக்கும். நீங்கள் அக்குழந்தையை தத்து எடுத்துக் கொள்வீர்கள் என்று கூறினார்கள். அவர்கள் கூறிய விளக்கத்திற்கு ஏற்ப நபி (ஸல்) அவர்களது தோட்டத்தில் ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டு ஷ∴பான் மாதம் 5 ஆம் தேதி ஒரு பூ பூத்தது. அந்த மலரின் நறுமணமானது உண்மை, வீரம், தைரியம், உறுதியான எண்ணம், கொள்கையில் உறுதியாக நிலைநிற்றல், நம்பிக்கை, நற்செயல், தியாகம், பற்றுறுதி ஆகியவை பள்ளத்தாக்கு -களை என்றென்றும் நறுமணம் கமழக் கூடியதாக ஆக்கி விடும்.

ஸய்யிதுனா ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள் மிகவும் அழகிய தோற்றத்தை உடையவர்களாக இருந்தார்கள். தோற்றத்திலும் வடிவத்திலும் ஒரு வகையில் தனது கண்ணியத்திற்குரிய பாட்டனாரை ஒத்தவர்களாக இருக்கின்ற நற்பேற்றை அன்னார் பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள் தமது கண்ணியமிக்க மூதாதையர்களிடமிருந்து எங்கு ஏனைய அழகிய நல்லொழுக்கங்கள் மற்றும் புகழுக்குரிய சிறப்புகளை வாரிசு என்ற நிலையில் பெற்றிருந்தார்களோ அத்துடன் சேர்த்து வீரத்தையும் தைரியத்தையும் அன்னார் வாரிசு என்ற நிலையில் அவர்களிடமிருந்து முழுமையாக பெற்றிருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் வீரர்களுக்கெல்லாம் வீரராக இருந்த ஹஸ்ரத் முஹம்மது முஸ்த∴பா (ஸல்) அவர்களின் பேரராகவும் ஸுல்∴பிகார் அலி முர்தஸா (ரலி) அவர்களின் புதல்வராகவும் இருந்தார்கள். மூன்றாவது கிலா∴பத்தின் காலக்கட்டத்தில் மதீனாவை கிளர்ச்சியாளர்கள் தமது பிடியின் கீழ் கொண்டு வந்தபோது ஹஸன் மற்றும் ஹுஸைன் (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இந்த இருவரும்தான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பாதுகாப்பதற்காக கிலா∴பத் கட்டடத்தின் வாயிலில் உருவிய வாளை ஏந்தியவாறு நின்று கொண்டிருந்தனர். ஹிஜ்ரி 51 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் அமீர் முஆவியா அவர்கள் தனக்கு பிறகு தமது மகனான யஸீதை ஆட்சியாளராக நியமித்தார். மேலும், மக்களிடம் வருங்காலத்தில் அவரையே தங்களது கலீ∴பாவாகவும் அமீராகவும் ஏற்றுக் கொண்டு இப்போதே அவரிடம் பைஅத் செய்யுங்கள் என்று கூறினார். ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள் இந்த வழிமுறையானது கிலா∴பத்தை தேர்ந்தெடுக்கின்ற வழிமுறைக்கு எதிராக இருப்பதைக் கண்டு யஸீதிடம் பைஅத் செய்ய மறுத்து விட்டார்கள். யஸீதிடம் பைஅத் செய்ய விரும்பாமல் இருந்த கூ∴பாவாசிகளுக்கு ஹுஸைன் (ரலி) அவர்களும் பைஅத் செய்யவில்லை என்ற செய்தி கிடைத்ததும் அம்மக்கள் ஏறக்குறைய 20,000 கடிதங்களை ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களுக்கு எழுதினார்கள். அவற்றில் நீங்கள் எங்கள் நகரத்திற்கு வாருங்கள். நாங்கள் உங்கள் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடந்து உங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பவர்களாக இருப்போம் என்று எழுதியிருந்தனர். ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்கள், முஸ்லிம் பின் அகீல் அவர்களை கூ∴பாவிற்கு அனுப்பி வைத்தார்கள். மக்கள் கூட்டம் கூட்டமாக அவர்களை சந்திப்பதற்கும் பைஅத் செய்வதற்கும் வரத் தொடங்கினர். அகீல் அவர்கள், ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களிடம் நீங்கள் தாமதமின்றி உடனடியாக கூ∴பா வாருங்கள் என்று கடிதம் மூலம் வேண்டினார்கள். ஹஸ்ரத் ஹுஸைன் அவர்கள் ஹிஜ்ரி 60 -வது ஆண்டில் துல்ஹஜ் மாதம் 8 ஆம் தேதி தமது மனைவி மக்களுடன் மக்காவிலிருந்து கூ∴பாவிற்கு புறப்பட்டுச் சென்றார்கள். இது பற்றிய எல்லா தகவல்களும் யஸீதிற்குக் கிடைத்தவுடன் ஆட்சி மற்றும் அதிகாரத்தின் கடிவாளம் தமது கைகளிலிருந்து நழுவிப் போய் விடக் கூடாதே என்ற அபாயம் அவருக்கு ஏற்பட்டது. யஸீது உபைதுல்லாஹ் பின் ஸியாது அவர்களை கூ∴பாவின் ஆட்சியாளராக நியமித்தார். உபைதுல்லாஹ் ஹஸ்ரத் முஸ்லிம் பின் அகீல் அவர்களையும் அவர்களுக்கு உதவியாளர்களாக இருந்தவர்களையும் கொன்று விட்டார்.

ஹுஸுர் ஹுஸைன் (ரலி) அவர்களுக்கும் அவர்களுடன் சென்றவர்களுக்கும் ஸஅல்பியா என்ற இடத்தில் இந்த வேதனையான சம்பவத்தை பற்றிய செய்தி கிடைத்தது. துக்கத்தால் நிறைந்திருந்த இவர்கள் ஸுஹஷம் என்ற இடத்தை அடைந்ததும் ஹர் பின் யஸீதின் படை இவர்களை சூழ்ந்து கொண்டது. உங்களை கைது செய்து இப்னே ஸியாதிடம் கொண்டு செல்லும் படி எங்களுக்கு கட்டளையிடப்பட்டிருக்கின்றது என்று ஹர், ஹுஸைன் (ரலி) அவர்களிடம் கூறினார். ஹுஸைன் (ரலி) அவர்கள் அவர் கூறுவதற்கு மறுப்பு தெரிவித்த பிறகும் கூட தொடர்ந்து அவர் அவர்கள் அனைவரையும் முற்றுகையிட்டு வந்தார். ஹர், கூ∴பாவாசிகளை கர்பலா என்ற இடத்தில் தடுத்து நிறுத்தினார். ஹிஜ்ரி 61 ஆம் ஆண்டில் முஹர்ரம் மாதம் 21 ஆம் தேதி அம்ர் பின் சஅது நான்காயிரம் பேர்களைக் கொண்ட படையுடன் கூ∴பாவைச் சென்றடைந்தார். அம்ர் அங்கு வந்ததுமே இப்னு ஸியாது அல்லாஹ் போருக்கான தீப்பிழம்புகளை குளிர வைத்து விட்டான் என்று எழுதி அனுப்பினார். ஆனால் வருத்தம் என்னவென்றால் இப்னு ஸியாத். எல்லாவற்றிற்கும் முதலாவதாக தன்னிடம் பைஅத் செய்யுமாறு கோரிக்கை வைத்தார். மேலும் முஹர்ரம் மாதம் 7 ஆம் தேதி கூ∴பாவாசி -களுக்கு தண்ணீர் தடுக்கப்பட வேண்டும் என்று தூதுச் செய்தி அனுப்பினார். அதற்கு ஏற்ப ∴புராத் நதியின் தண்ணீர் அடைக்கப்பட்டு அவர்களுக்கு தண்ணீர் தடை செய்யப்பட்டது. ஆனால், இந்த அநீதியும் காட்டுமிராண்டித்தனமும் கூட ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களை தலைகுனிய வைத்து விடவில்லை. மேலும், கிலா∴பத்தை தேர்வு செய்வதற்கான உரிமை நாட்டு மக்களுக்கு இருக்கின்றது. எந்த மகனும் தனது தந்தைக்கு

பிறகு வாரிசு என்ற நிலையில் இந்த உரிமையை அபகரித்துக் கொள்ள முடியாது என்ற இந்த அடிப்படையான கொள்கையிலிருந்து அவர்கள் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களை விலக்க முடியவில்லை.

இறுதியில் முஹர்ரம் மாதம் 10 ஆம் தேதி யஸீதின் படைகளும் எழுபதிற்கும் அதிகமான நபர்கள் எவ்வித முன்னேற்பாடும் செய்யாமல் பொருள்களும் இல்லாத நிலையில் அணி திரண்டனர். ஹுஸைன் (ரலி) அவர்களுடன் பயணத்தில் வந்தவர்கள் தங்களது வீரத்தை நிரூபித்துக் காட்டியவாறு மிகவும் துணிச்சலுடன் இவர்களை எதிர்த்து போர் புரிந்தனர். கர்பலாவின் மண்ணை தமது இரத்தத்தால் அவர்கள் நிறைத்து விட்டனர். ஹுஸைன் (ரலி) அவர்களின் சகோதரரும், அவர்களது மகனும் ஒருவர் பின் மற்றொருவராக தமது உயிர்களை தியாகம் செய்து கொண்டே இருந்தனர். அஸ்ர் நேரம் வந்த போது அநீதியிழைத்தவர்கள் நாலாப்புறமும் அவர்களைச் சுற்றி வளைத்தவாறு நின்றனர். அவர்களில் ஒருவன் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களின் நெற்றியில் அம்பை எய்தினான். அதன் காரணமாக ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களின் அருளுக்குரிய முகத்தில் காயம் ஏற்பட்டது. இன்னொருவர் வாளால் தாக்குதல் நடத்திய போது அன்னாரது கை வெட்டப்பட்டது. பிறகு தொடர்ந்து தாக்குதல் நடைபெற்று வந்தது. இறுதியில் காயங்களைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் அவர்கள் கர்பலா மைதானத்தில் விழுந்து கிடந்தார்கள். அப்போது பேரிழந்த ஒருவன் முன்னால் வந்து அவர்களது தலையை அன்னாரது தூய உடலிலிருந்து தனியாக வெட்டி எடுத்து விட்டான். தியாகங்களின் இந்த தொடர் அரேபிய பாலைவனத்திலிருந்து ஆரம்பித்து கர்பலாவின் நெஞ்சத்தை புண்ணாக்குகின்ற முற்கள் நிறைந்த பாதைகளையெல்லாம் கடந்து பல இடங்களையும் காலத்தையும் கடந்து பயணம் செய்தவாறு பின்னவர்களின் ஜமாஅத்தில் காபூல் மண்ணில் வந்து சேர்ந்தது.

20 ஜுன் 1901 -ல் ரஹ்மானான இறைவனின் அடியாரான காபூலைச் சார்ந்த அப்துர் ரஹ்மான் அவர்கள் இறைவழியில் தமது உயிரை அர்ப்பணித்து பின்னவர்களின் ஜமாஅத்தின் முதல் ஷஹீது என்ற பெருமையைப் பெற்றார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்துடன் காதியானின் புனித மண்ணிலிருந்து எழுந்த அந்த குரல் எல்லா பக்கமும் பரவிக் கொண்டே சென்றது. இந்த தருணத்தில் ஆ∴ப்கானிஸ்தானை சார்ந்த மிகவும் தூய எல்லா சிறப்புகளையும் பெற்றிருந்த ஒரு பெருந்தகையான ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீ∴ப் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தோற்றம் மற்றும் அன்னாரது வாதம் பற்றி கேள்விப்பட்டார்கள். அதைப் பற்றி அவர்கள் தமது சீடர்களிடம் கூறினார்கள். பற்றுறுதிமிக்க அன்னாரது மாணவர்களில் ஒருவரான மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் நான் காதியான் சென்று எல்லா விபரங்களையும் கேட்டு தெரிந்து கொண்டு வருகின்றேன் என்று சாஹிப் ஸாதா சாஹிபிடம் கூறினார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் அழகிய தோற்றம் உள்ள நடுநிலையான உயரத்தையும் உறுதியான உடலையும் கொண்டிருந்த படித்த இளைஞராக இருந்தார்கள். அன்னார் மங்கல் சமுதாயத்தின் அஹ்மது ஸயி என்ற கோத்திரத்துடன் தொடர்பு உள்ளவர்களாக இருந்தார்கள். இந்த இளைஞர் ஏறக்குறைய 1895 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களில் காதியான் வந்தார்கள். அதற்கு பிறகு மவ்லவி சாஹிப் அவர்கள் பல மாதங்கள் வரை காதியானில் தங்கியிருந்தார்கள். அதற்கு பிறகு ஆப்கானிஸ்தானிலுள்ள தமது பகுதியான ஹோஸ்த்திற்கு திரும்பிச் சென்று ஹஸ்ரத் மவ்லவி அப்துல் லத்தீ∴ப் சாஹிப் அவர்களிடம் எல்லா நிலைமைகளையும் பற்றி எடுத்துக் கூறினார்கள். அதற்கு பிறகும் காதியான் வந்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அன்னாரது பெயரை தமது 313 சஹாபாக்களின் பெயர்களுடன் சேர்த்து எழுதி இருந்தார்கள். அந்நாட்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு நூலை எழுதினார்கள். அதில் ஹுஸுர் (அலை) அவர்கள் வாளால் செய்யப்படும் ஜிஹாது ஹராமாக்கப்பட்டு விட்டது என்று எழுதியிருந்தார்கள். ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்கள் காபூலிலும் ஹோஸ்திலும் பல இடங்களில் இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் வாளால் செய்யப்படும் ஜிஹாது இக்காலத்தில் ஹராமாக்கப்பட்டு விட்டது என்று கூற ஆரம்பித்தார்கள். அப்போது இந்த செய்தி படிப்படியாக ஆப்கானிஸ்தானின் ஆட்சியாளரான அமீர் அப்துர் ரஹ்மானைச் சென்றடைந்தது. சில தீயவர்கள் அவரிடம் இவர் தம்மை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று கூறுகின்ற ஒரு நபரது சீடராவார். அவர்தான் கொலை செய்வது ஜிஹாது ஆகாது என்ற போதனையைக் கூறி வருகின்றார் என்று கூறினர். பேறிழந்த அமீர் இந்த போதனையானது தனது எண்ணத்திலிருக்கும் கருத்துகளுக்கு மாற்றமாக இருப்பதைப் பார்த்து ஆத்திரமடைந்தார். அவரது கட்டளைக்கு ஏற்ப மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பிறகும் கூட அதனால் அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையானது அவர்களது உறுதிமிக்க பாதங்களில் எவ்வித தடுமாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இதனை பார்த்த பிறகு ஒரு கணிப்பிற்கு ஏற்ப எதிரிகளால் 20 ஜுன் 1901 -ல் காபூலிலுள்ள சிறைச்சாலை யிலேயே மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் கழுத்தை நெரித்துக் கொலை செய்யப்பட்டார்கள். இவ்வாறு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முதல் ஷஹீது என்ற நற்பேற்றை அவர்கள் பெற்றார்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வந்த இல்ஹாம் ஆன شَاتَانِ تُذْبَحَانِ அதாவது, இரண்டு ஆடுகள் பலியிடப்படும் என்பதற்கு முதலில் பொருந்தக் கூடியவர்களாக அன்னார் திகழ்ந்தார்கள். அவ்வாறு காபூலின் கல்லுள்ளம் கொண்டவர்களின் பூமியில் தனது இரத்தத்தின் மூலமாக உண்மை, தூய்மை மற்றும் பற்றுறுதியின் தியாக வரலாற்றை அவர்கள் எழுதியுள்ளார்கள். மறுமை நாள் வரை அது உண்மையின் மீது பேரன்பு கொண்டவர்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக இருக்கும்.

இதற்குப் பிறகு பஞ்சாபின் கேபினட் அமைச்சரான ஜனாப் திர்பத் ராஜந்தர்சிங் பாஜ்வா அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு மத்தியில் சுருக்கமாக உரை நிகழ்த்தினார்கள். எல்லாவற்றிற்கும் முதலாவதாக ஜமாஅத்திற்கு இந்த மாநாட்டிற்கான வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், பஞ்சாப் அரசு எப்போதும் ஜமாஅத்திற்கு தனது ஒத்துழைப்பை நல்கும் என்று உறுதியாக கூறிக் கொள்கின்றேன் என்று அவர்கள் கூறினார்கள். மேலும், ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்களை பின்பற்றுபவர்கள் உலகில் அதிகமாக பெருக வேண்டிய தேவை இருக்கின்றது. அப்போது தான் உலகில் கொலை மற்றும் கொள்ளை நிறுத்தப்பட்டு விடும். அமைதியுடனும் பாதுகாப்-புடனும் மக்கள் வாழ்வார்கள். முழு உலகிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் பரவும் படி அல்லாஹ் செய்வானாக. அதன் மூலம் விரைவாக உலகில் அன்பு மற்றும் நேசத்தின் சுற்றுச்சூழல் நிலைபெற வேண்டும் என்று அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்கள். இறுதியில் அவர்கள் உளப்பூர்வமாக நான் ஹுஸுர் அவர்களை காதியான் வருமாறு அழைக்கின்றேன் என்றும் கூறினார்கள்.

அதற்குப் பிறகு குரோஷியாவில் இருந்து வருகை தந்திருந்த கண்ணியத்திற்குரிய அஹ்மதி விருந்தினரான மதிப்பிற்குரிய முபாரக் சியாக் மோதா பீவோவிச் சாஹிப் அவர்கள் தமது தாக்கங்களை வெளிப்படுத்தியவாறு உரை நிகழ்த்தினார்கள். அதன் உருது மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய முஸ∴ப்பர் அஹ்மது நாஸிர் சாஹிப் (தலைமையக நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாத் மற்றும் மாநாட்டுத் திடலின் அதிகாரி) அவர்கள் படித்துக் காட்டினார்கள்.

அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நமது இந்த கண்ணியத்திற்குரிய விருந்தினர் குரேஷியாவில் இருந்து வந்துள்ளார்கள். அவர்கள் தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்: நானும் எனது மனைவியும் உட்பட நான்கு பேர் குரேஷியன் குழுவாக காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்துள்ளோம். ஓர் ஆய்வின்படி பல்கானின் பகுதியிலிருந்து காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டுள்ள முதல் குரோஷியன் அஹ்மதி கணவன்-மனைவியாக நாங்கள் இருக்கின்றோம். அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் எங்களுக்கு அக்ரபில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியின் மூலமாக தொடர்பு ஏற்பட்டது. 2016 -ல் யூ.கே ஆண்டு மாநாட்டில் மீண்டும் கலந்து கொள்வதற்கான நல்வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது. ஆனால், இந்த மாநாட்டில் நாங்கள் அஹ்மதிகளாக கலந்து கொண்டோம். ஜமாஅத்தின் தூதுச் செய்தியை பரப்புவதுடன் உலகில் Humanity First (மனிதம் முதலில்) என்ற அமைப்பின் கீழ் மனித வளர்ச்சிகளான பல திட்டங்கள் எனது கண்காணிப்பின் கீழ்

குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அல்லாஹ்வின் அருளால் குரேஷியாவில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு மிகவும் நல்ல பெயர் இருந்து வருகின்றது. அஹ்மதிகளாக நாங்கள் ஆன பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாழ்ந்த காதியானின் புனித மண்ணைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை மிகுதியாக எங்களது உள்ளத்தில் இருந்தது. இந்த வருடம் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டதன் மூலமாக எங்களது இந்த ஆசையை அல்லாஹ் நிறைவேற்றி விட்டான் - அல்ஹம்துலில்லாஹ். தில்லியிலும் காதியானிலும் நாங்கள் தங்கியிருந்த சமயத்தில் எங்களுடன் எந்த அளவு அன்புடனும் கலப்பற்ற தன்மையுடனும் ஜமாஅத் சகோதரர்கள் நடந்து கொண்டனர் என்றால், மேலும் எந்த அளவு சிறந்த முறையில் எங்களது தேவைகளை நிறைவேற்றினர் என்றால் இதற்காக நாங்கள் எல்லா பொறுப்பாளர் -களுக்கும் ஏனைய தொண்டர்களுக்கும் எங்களது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியைத் தெரிவித்து கொள்கின்றோம். இந்த புனித ஊரில் வாழும் நீங்கள் மிகவும் நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றீர்கள். அல்லாஹ் உங்களை மகிழ்ச்சியுடன் வைத்திருப்பானாக. காதியானின் பெயரும் அதன் கண்ணியமும் உலகில் உயர்ந்து கொண்டே செல்லட்டும்.

## இரண்டாவது நாளின் இரண்டாவது அமர்வு:

இரண்டாவது நாளின் இரண்டாவது அமர்வின் நிகழ்ச்சிகள் மதிப்பிற்குரிய முஹம்மது ஷரீ்ஃப் ஓதா சாஹிப் (அமீர், அஹ்மதிய்யா ஜமாஅத், பாலஸ்தீனம்) அவர்களின் தலைமையில் ஆரம்பம் ஆனது. இந்த அமர்வு ஜமாஅத்தின் மரபிற்கேற்ப மதத்தோற்றுனர்களின் மாநாடாக நடத்தப்படு -கின்றது. இதில் குறிப்பாக இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து அரசியல் தலைவர்களும் சமுதாய மற்றும் மார்க்கத் தலைவர்களும் தமது கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். மாநாட்டு நிகழ்ச்சி திருக்குர்ஆன் திலாவத்துன் ஆரம்பம் ஆனது. பாகிஸ்தானில் ரப்வாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மாணவரான மதிப்பிற்குரிய ஹா்ஃபிஸ் அப்துஸ் ஸலாம் சாஹிப் அவர்கள் சூரா அல் பக்கராவின் 285 முதல் 287 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள். அதன் இந்தி மொழியாக்கத்தை மதிப்பிற்குரிய ஷேக் முஜாஹிது அஹ்மது சாஸ்திரி சாஹிப் (ஆசிரியர், பத்ர் வாத இதழ் - இந்தி பதிப்பு) அவர்கள் படித்துக் காட்டினார்கள். அதற்குப் பிறகு ஜமாஅத்தின் முரப்பியான காதியானைச் சார்ந்த மதிப்பிற்குரிய ரிஸ்வான் அஹ்மது ஸ்ஃபர் சாஹிப் அவர்களும் அவர்களது நண்பர்களும் ஹஸ்ரத் நான்காவது கலீ்ஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் கவிதையை கூட்டுப் பாடலாகப் பாடினர். அதற்குப் பிறகு அமர்வின் தலைவர் அவர்கள் ஹுஸுர் அய்ய -தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 29 டிசம்பர் 2017 அன்று தமது குத்பா பேருரையில் குறிப்பிட்டுக் கூறியிருந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்த துஆ ஒன்றைக் கூறினார்கள். மேலும் மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரும் அந்த துஆவின் சொற்களை திரும்பக் கூறும்படி கூறினார்கள். அவ்வாறே மாநாட்டிற்கு வந்திருந்த அனைவரும் அவர்களுடன் சேர்ந்து அந்த துஆவை திரும்பவும் கூறினர்.

❖ இந்த அமர்வில் ஒரு சொற்பொழிவு மட்டுமே இருந்தது. அந்த சொற்பொழிவை பஞ்சாபி மொழியில் மதிப்பிற்குரிய மவ்லவி கியானி மவ்லவி தன்வீர் அஹ்மது காதிம் சாஹிப் (தலைமையக துணை நாஸிர் த்ஃவத்தே இலல்லாஹ்) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர்கள் தமது சொற்பொழிவின் துவக்கத்தில் சூரா அத்தவ்பாவின் 33 -வது வசனத்தை ஓதினார்கள். அதன் மொழியாக்கத்தையும் படித்துக் காட்டினார்கள். அதற்குப் பிறகு பகவத் கீதையிலிருந்து அதன் நான்காவது அத்தியாயத்தின் 7 மற்றும் 8 -வது சுலோகங்களை படித்துக் காட்டினார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள்: இக்காலத்தில் எல்லா பக்கங்களிலும் மார்க்கமின்மை பரவி வருகின்றது. மக்கள் தீமைகளிலும் தவறான செயல்களிலும் அளவுக்கு அதிகமாக முன்னேறி வருகின்றனர். பாவமும் வெட்கக் கேடான நிலைமையும் எல்லா பக்கமும் பரவி வருகின்றது. மார்க்கப் போதனைகளுக்கு எந்தவொரு மதிப்பும் இல்லாமல் போய் விட்டது. சீக்கியர்களின் மார்க்க நூலான குரு கிரந்த் சாஹிபிலும் கூட இந்த தீமைகள் பற்றிய குறிப்பு இருக்கின்றது. இவ்வாறே இந்த மதத்தின் புராணங்களிலும் கூட இந்தக் கலியுகத்தின் அடையாளங்கள் எடுத்துக் கூறப்பட் -டிருக்கின்றது. அதன் சுருக்கம் மஹாபாரதத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. யூத மற்றும் கிறித்தவ மதத்திலும் கூட இந்த இறுதிக் காலத்தின் நிலைமைகள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறே எல்லா மதங்களும் இந்த கலியுகத்தை பற்றிய அடையாளங்களையும் நிலைமைகளையும் விளக்கமாக தமது மத நூல்களில் குறிப்பிட்டிருக் -கின்றது. அவற்றில் இந்த பாவங்களையும் குழப்பத்தையும் அகற்றுவதற்காக ஒரு அவதார புருஷர் தோன்றுவார். அவர் மார்க்கங்கள் எதிர்நோக்கும் வாக்களிக்கப்பட்ட மகான் என்ற பெயரால் அறியப்படுவார் என்றும் குறிப்பிடப் -பட்டிருக்கின்றது. இஸ்லாம் மார்க்கத்திலும் இந்த இறுதிக் காலத்தில் ஓர் இமாம் மஹ்தி மற்றும் மஸீஹ் வருவது பற்றி நற்செய்தி வழங்கப்பட்டிருக் -கின்றது. இறுதிக் காலத்தில் தோன்றவிருக்கின்ற எந்த நபியைப் பற்றிய முன்னறிவிப்பை இஸ்ரவேல் சந்ததிகளின் நபிமார்களும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த்ஃபா (ஸல்) அவர்களும் செய்திருந்தனரோ எவரைப் பற்றிய நற்செய்தியை அவர்கள் வழங்கி இருந்தனரோ அந்த நபி வந்து விட்டார் என்ற செய்தியை இந்த எளியவன் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள்தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் ஆவார்கள். அவர்கள் 13 பிப்ரவரி 1835 -ல் காதியானில் பிறந்தார்கள். அவர்கள் தமது கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

*நான் சரியான நேரத்தில் வானத்திலிருந்து*
*வந்துள்ள தண்ணீர் ஆக இருக்கின்றேன்.*
*பகல் வெளிப்படுவதற்குக் காரணமாக இருந்த*
*அந்த இறைவனின் ஒளி நான் ஆவேன்.*

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: "எனக்கு இறைவனின் தூய வஹியின் மூலமாக நான் அவன் தரப்பிலிருந்து மஸீஹாகவும் மஹ்தியாகவும் வெளிப்புற மற்றும் உட்புற கருத்து வேறுபாடு -களுக்கு தீர்ப்பு கூறுபவனாகவும் அனுப்பப் -பட்டுள்ளேன் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது."

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களை பெரும் பெரும் ஆலிம்கள் எதிர்த்து நிற்கின்றனர். அவர்கள் அனைவருமே தோல்வியை தழுவினர். மவ்லவி சாஹிப் அவர்கள் தொடர்ந்து தமது உரையில் இவ்வாறு கூறினார்கள்: 1889 ஆம் ஆண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அடித்தளம் லூதியானாவில் நிறுவப்பட்டது. அப்போது தூய உள்ளம் கொண்ட நாற்பது பேர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் கைகளில் பைஅத் செய்தனர். இன்று ஜமாஅத் உறுப்பினர்களின் எண்ணிக்கை கோடிகளை எட்டி விட்டது. ஜமாஅத்தின் செடி 210 நாடுகளில் நடப்பட்டு விட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தற்போதைய இமாம் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் முழு உலகிலும் அமைதி, சகோதரத்துவம் மற்றும் சாந்தியின் தூதுச் செய்தியை வழங்கி வருகின்றார்கள். இறுதியில் மவ்லவி சாஹிப் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றம் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது எழுச்சியூட்டக்கூடிய சில மேற்கோள்களைப் படித்துக் காட்டினார்கள்.

இந்த சொற்பொழிவுக்குப் பிறகு கீழ்க்காணும் அரசியல் மற்றும் மார்க்கத் தலைவர்கள் தங்களது தாக்கங்களை வெளிப்படுத்தினர்.

1) ஜனாப் ்ஃபதஹ் சிங் பாஜ்வா அவர்கள் (காதியான் சட்டமன்ற உறுப்பினர்)

இவர்கள் அமர்வின் தலைவர் அவர்களுக்கும் மாநாட்டில் கலந்து கொண்டிருப்பவர்களுக்கும் தமது ஸலாத்தை தெரிவித்தார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள்: "எனது குடும்பத்திற்கு கடந்த 70 வருடங்களாக அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் மிகவும் அன்பு நிறைந்த தொடர்பு இருக்கின்றது. ஜமாஅத் சகோதரர்களுடனும் மிகவும் அன்பான தொடர்பு இருந்து வருகின்றது. நான் காதியானில் வசிப்பவன் என்பதில் எனக்கு பெருமை இருக்கின்றது. இங்கிருந்துதான் அஹ்மதிய்யத்தின் அடித்தளம் அமைக்கப்பட்டது. இது தூய பூமியாகும்."

இறுதியில் அவர்கள் எல்லா விருந்தினர் -களையும் வரவேற்றவாறு அவர்களுக்கு நன்றியும் தெரிவித்தார்கள்.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான்.**
[16:129]

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்தத்(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது.
(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான்.
(29:70)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும்.
(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

**எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். [22:40]**

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹாஃபிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை.
(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சத்ர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குபடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்?
(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 22 February 2018 Issue No. 8

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(10-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

2) மதிப்பிற்குரிய சுனில் ஜாக்கடு அவர்கள் (பஞ்சாப் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் மற்றும் குர்தாஸ்பூர் பாராளுமன்ற உறுப்பினர்)

இவர்கள் அமரின் தலைவர் அவர்களுக்கும் மாநாட்டின் கலந்து கொண்டவர்களுக்கும் ஸலாம் கூறினார்கள். மேலும் 123 -வது ஆண்டு மாநாட்டிற்கான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள்: "நான் இங்கு முதன் முறையாக வந்துள்ளேன். இது எனது நற்பாக்கியம் ஆகும். இங்கு இன்ஸானிய்யத் சிந்தாபாத் (மனித நேயம் வாழ்க) என்ற முழக்கம் இருந்தது. இது உங்களிடம் காணப்படுகின்ற தனிச் சிறப்புமிக்க உதாரணமாகும். நான் ஒருபோதும் எனது வாழ்நாளில் இன்ஸானிய்யத் சிந்தாபாத் (மனிதநேயம் வாழ்க) என்று முழக்கமிட்ட எவரது முழக்கத்தையும் கேட்டதில்லை. உண்மையில் இது ஓர் ஈடிணையற்ற முன்மாதிரியாகும். அமைதியை விரும்புகின்ற இந்த ஜமாஅத்தின் மீது ஒருபோதும் சூரியன் அஸ்மதிக்காது. ஜமாஅத் செய்து வரும் முயற்சிகள் புகழ்ந்து கூறுவதற்கு தகுதியுடையவையாகும். ஜமாஅத் வெறுப்பின் புயலை தடுப்பதற்காக செய்து வருகின்ற மகத்தான பணியானது பாராட்டுவதற்குத் தகுதி உடையாகும்."

கண்ணியத்திற்குரிய இந்த விருந்தினர் இறுதியில் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

3) ஜனாப் சேவா சிங் சீக்குவான் அவர்கள் (காதியானின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்)

இவர்கள் அமரின் தலைவர் அவர்களுக்கும் மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கும் தனது ஸலாத்தைத் தெரிவித்தார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள்: "இஸ்லாத்தின் அமைதியை விரும்புகின்ற போதனைகளை ஜமாஅத் பரப்புகின்றது. சீக்கிய மதத்திற்கும் இஸ்லாத்துடன் நெருங்கி தொடர்பு இருக்கின்றது. சீக்கிய மதத்தின் மீது ஏதாவதொரு துன்பம் வருகின்றபோது முஸ்லிம்கள் சீக்கிய குருமார்களுக்கு ஆதரவளித்துள்ளான். இந்த இரண்டு மதங்களுக்கிடையில் பரஸ்பரம் மிக அதிகமான அன்பு இருந்து வந்திருக்கின்றது. சீக்கியர்களின் புனித இடமான ஹர்மந்திர் சாஹிபிற்கான அடித்தளத்தை ஒரு முஸ்லிம்தான் ஏற்படுத்தினார். அதன் மூலம் பரஸ்பரம் சீக்கியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் சகோதரத்துவமும் மனிதநேயமும் வளர்ச்சியடைவதில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்று அவர் கருதினார். ஜமாஅத்தும் அமைதி, சாந்தி, அன்பு, நேசம் ஆகியவற்றின் தூதுச் செய்தியை உலகம் முழுவதும் பரப்பி வருவது புகழ்ந்து கூறுவதற்கு தகுதியுடையதாகும். இந்த மாநாட்டை எந்த அளவு நாம் புகழ்ந்து கூறினாலும் அது குறைவேயாகும். ஜமாஅத் இன்று எல்லா மதங்களையும் ஒரே அணியில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றது."

இறுதியில் கண்ணியத்திற்குரிய விருந்தினர் அவர்கள் அனைவருக்கு நன்றி தெரிவித்தார்கள்.

4) ஜனாப் தேக்ஷன் சோது அவர்கள் (பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவர்)

இவர்கள், அனைவருக்கும் தனது ஸலாத்தை தெரிவித்துக் கொண்டார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள்: "நான் இதற்கு முன்னரும் ஆண்டு மாநாட்டிற்கு வந்திருக்கின்றேன். காதியான் ஒரு தூய புனித இடமாகும். இங்கு அனைவருமே அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தைப் பற்றியே பேசுகின்றனர். உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு ஜமாஅத் தனது மிகப்பெரிய பங்களிப்பை வழங்கி வருகின்றது. இங்கு கூடியிருக்கின்ற ஒவ்வொருவரும் சுயமே இதற்கு ஓர் உதாரணமாகத் திகழ்கின்றனர். இன்றைய இந்த நாள் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக இருக்கின்றது. இந்த மகிழ்ச்சியான தருணத்தில் நான் உங்கள் அனைவருக்கும் மிகவும் அதிகமாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஜமாஅத் தனது அமைதியைப் பரப்புகின்ற முயற்சியில் வெற்றி பெற வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும்."

5) ஜனாப் ராஜ் குமார் வேர்க்கா அவர்கள் (அமிர்தசரஸ் சட்டமன்றத்தின் முன்னாள் உறுப்பினர்)

இவர்கள் தமது உரையில் இவ்வாறு கூறினார்கள்: "மாநாட்டின் தலைவர் அவர்களுக்கும் வருகை தந்திருக்கின்ற அனைவருக்கும் எனது அன்பான ஸலாத்தை தெரிவிப்பதுடன் உங்கள் அனைவரையும் நான் வரவேற்கின்றேன். இந்த மாநாட்டில் மனிதநேயம் தொடர்பாக கூறப்படுகின்ற போதனைகள் மிகவும் உயர்வானதாகும். இந்த அமைதி நிறைந்த சூழலில் இந்த தூய ஊரில் ஒன்று திரண்டிருக்கின்ற நீங்கள் நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றீர்கள். மனிதநேயம் தொடர்பாக நீங்கள் வழங்கும் தூதுச் செய்தி மிகப்பெரும் தூதுச் செய்தியாகும். முழு உலகிலிருந்தும் மக்கள் வருகை தந்துள்ள பஞ்சாபின் மண்ணானது அன்பு மற்றும் அமைதியின் மண்ணாக இருக்கின்றது. இத்தகைய அன்பு நிறைந்த சூழலில் உங்கள் மத்தியில் வருவதற்கு எனக்கு நீங்கள் விடுத்த அழைப்பிற்கு நான் மிகவும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இன்று மார்க்கம் நாலாப்புறமும் ஒரு வியாபாரமாக ஆகி விட்டதை நாம் பார்க்கின்றோம். ஆனால் உண்மையில் மனிதநேயத்தின் மார்க்கம்தான் தேவைப்படுகின்றது. மார்க்கத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற இடைவெளிகளின் தூரத்தை நாம் அனைவரும் ஒன்றாக அமர்ந்து பேசும்போதுதான் குறைக்க முடியும். மேலும் அதற்கான தீர்வையும் காண முடியும். காதியானின் இந்த தூய மண்ணில் எல்லா மதங்களும் கண்ணியமளிக்கப்படுகின்றது. மனித இனத்திற்கு நீங்கள் செய்து வரும் தொண்டிற்காக நான் உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்."

6) ஜனாப் சுவாமி சுஷில் அவர்கள் (கன்வீனியர் இன்டர்நேஷனல் தரம், டில்லி)

இவர்கள் தமது சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்கள்: "மாநாட்டில் கலந்து கொண்டிருக்கும் அனைவருக்கும் நான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அனைவருக்கும் எனது அன்பு நிறைந்த ஸலாத்தை தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் கூறுகின்ற முழக்கங்கள் எங்கள் அனைவரது உள்ளத்தையும் தொட்டு விட்டது. மனித நேயத்தின் இந்த மாநாடு எல்லா மதத்தவர்களும் ஒன்றாக இருக்கின்ற மாநாடாகும். அஹ்மதிய்யா ஜமாஅத் எல்லாரையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு செல்கின்ற ஒரே ஜமாஅத்தாக இருக்கின்றது. மனித நேயத்தின் உண்மையான வடிவத்தை முழு இந்தியாவிலும் அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே நம் முன்னால் கொண்டு வருகின்றது. மற்ற மதங்களின் தூதர்களை குறித்து கண்ணியத்துடன் பேசுவது, எல்லாவற்றையும் விட அதிகமாக தேவைப்படுகின்ற விஷயமாக இருக்கின்றது. உங்களது ஜமாஅத் அமைதியின் திறந்த புத்தகமாகும். நீங்கள் செய்கின்ற நல்ல பணிகளுக்காக நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் இந்த பணி மிகவும் கடினமானது. வேறு எவராலும் இதை செய்ய முடியாது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் அவர்கள் இந்த சிறிய ஊரில் பிறந்தார்கள். அவர்கள் அன்பு மற்றும் நேசத்தின் தூதுச் செய்தியை உலகில் பரப்பினார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்ற உண்மையான மக்கள் எவராவது இருக்கின்றனர் என்றால் அது நீங்களேயாவீர்கள். பல அஹ்மதி அல்லாத மக்கள் என்னை அஹ்மதிய்யா பிரிவைச் சார்ந்த சகோதரர்களை சந்திப்பதிலிருந்தும் தடுக்கின்றனர். அந்த மக்களை சந்திப்பதிலிருந்து அஹ்மதிகள் என்னை தடுக்காமல் இருக்கின்றபோது அவர்கள் அஹ்மதிகளை சந்திப்பதிலிருந்து என்னை தடுப்பது தவறாகும். அதர்மங்கள் ஏற்படுகின்றபோது யாராவது ஓர் அவதாரபுருஷர் தோன்றத்தான் செய்வர். நான் உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் அனைவரையும் வரவேற்கின்றேன்."

*(தொடரும்....)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad